RE/MAX REALTRON BLUE FORCE · TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710

மலர்:- 30, 28 ஏப்ரல் 2023 இதழ்:- 01

# ஈழநாடு


பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# அரங்கம் நிறைந்த ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா







உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த திரு றோய் இரத்தினவேல் அவர்களுக்கும் வீணை இசைச்சங்கமம் நிகழ்ச்சியை வழங்கிய வீணை இசை வேந்தன் கலைமாமணி ராஜேஸ் வைத்தியா அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் அனைத்து வழிகளிலும் எம்மோடு ஒன்றித்துப் பயணித்த என் இனிய நண்பர் ஞான பண்டிதர், யோகா அண்ணர், வீணாலயம் இசை ஆசிரியை ஸ்ரீமதி ஜெயந்தி இரட்ணகுமார் ஆகியோருக்கும் மனமார்ந்த நன்றிகள். இன்றிலிருந்து 30வது ஆண்டில் உங்கள் அபிமான ஈழநாடு பயணத்தைத் தொடர்கின்றது. பயணம் தொடரும்! பாதைகள் மாறாது! அடுத்த வாரம் விழாவின் புகைப்படங்களின் தொகுப்பு வெளிவரும்.

# கறுப்புப் பட்டியலில் முன்னாள் கடற்படைத் தளபதி! பயணத் தடை விதித்தது அமெரிக்கா!



மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்ன கொடவிற்கு அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இதனை அறிவித்துள்ளது.

இலங்கை கடற்படையின் தளபதியாக பதவி வகித்த காலத்தில் இடம் பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுடன் இலங்கையின் வடமேல் மாகாணத்தின் தற்போதைய ஆளுநராக உள்ள (3ம் பக்கம் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm.
Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




20 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence/ Galloway

**Scarborough** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals


### Finch & Pharmacy

**Scarborough** $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area


### Yonge/Finch

**Toronto** $579,000
Bedrooms: 1 Washrooms: 1
Luxurious Bright & Spacious unit

### Bowmanville /Northglen

**Clarington** $699,000
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Townhouse

### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Low Maintenance Free

### Queens Quay & Lower Sherbourne

**Toronto** $874,900
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

### Steeles/Mclaughlin

**Brampton** $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
A Quiet Family Neighborhood


### River Street & Highway 12

**Brock** $1,350,000
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement


### Meadowvale / 401

**Scarborough** $1,998,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.

### Sandalwood & Richvale

**Brampton** $675,000
Bedrooms: 3 Washrooms: 2
Call for more info

### Eglinton/Sloane

**Toronto** $539,000
Bedrooms: 1 Washrooms: 1
Doubble Closet & Open Balcony.

### Danforth & Eglinton Ave

**Toronto** $456,500
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept With Modern Kitchen

### Keele/Sheppard

**Toronto** $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

### Mccowan & Ellesmere
FOR LEASE

**Scarborough** $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

### Liverpool & Commerce S
FOR LEASE

**Pickering** $2,700
Bedrooms: 3 Washrooms: 1
Close To Parks

### Birchmount/Ellesmere
FOR LEASE

**Scarborough** $2,400
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கறுப்புப் பட்டியலில் முன்னாள் கடற்படைத் தளபதி! பயணத் தடை விதித்தது அமெரிக்கா!



மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்ன கொடவிற்கு அமெரிக்கா பயணதடை விதித்துள்ளது. அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இதனை அறிவித்துள் ளது.

இலங்கை கடற்படையின் தளபதியாக பதவிவகித்த காலத்தில் இடம் பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுடன் இலங்கையின் வடமேல் மாகாணத்தின் தற்போதைய ஆளுநராக உள்ள வசந்த கரன்னகொடவிற்கு உள்ள தொடர்பு கள் காரணமாக வெளிநாட்டுச் செயற் பாடுகள் மற்றும் தொடர்புடைய ஒதுக்கீட்டுச் சட்டம் 2023 இன் பிரிவு 7031 இன் கீழ் வசந்த கரன்ன கொடவை இந்த பட்டியலில் சேர்ப்ப தாக இராஜாங்க திணைக்களம் அறி வித்துள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் வசந்த கரண்னகொடவும் அவரது மனைவி ஸ்ரீமதி அசோக கரன்னகொடவும் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக இராஜா ங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

வசந்த கரன்னகொட பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என அரசசார்பற்ற அமைப்புகளும் சுயாதீன விசாரணையாளர்களும் பதிவு செய்த குற்றச்சாட்டுகள் நம்பகதன்மை வாய்ந் தவை பாரதூரமானவை என அமெ ரிக்க இராஜாங்க திணைக்களம் தெரி வித்துள்ளது.

மனித உரிமைகளை நிலைநிறுத்து தல், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனையின் பிடி யிலிருந்து விடுவிக்கப்படும் கலாச்சார த்தை முடிவிற்கு கொண்டு வருதல், பாதிக்கப்பட்டவர்கள் தப்பியவர்களின் துயரங்களை அங்கீகரித்தல், இலங்கை யில் குற்றமிழைத்தவர்களிற்கு எதிராக பொறுப்புக்கூறப்படுதல் போன்றவை குறித்த தனது அர்ப்பணிப்பை அமெ ரிக்கா மீள வலியுறுத்துகின்றது என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இலங்கை கவலை

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரணாகொடவை அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள் ளவர்களின் பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளமை குறித்து இலங்கை கவலை வெளியிட்டுள்ளது என வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.


அமெரிக்காவின் தீர்மானம் குறித்து வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலிசங்கிடம் தனது கவலையை வெளியிட்டுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையின் நீண்டகால இருதரப்பு சகாவான அமெரிக்கா உரிய நடை முறைகளை பின்பற்றாமல் எடுத்துள்ள ஒருதலைப்பட்சமான தீர்மானம் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஐக்கிய த்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளிற்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படு த்தக் கூடியது என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் ஜனநாயக ஆட்சி மற்றும் நல்லிணக்க கட்டமைப்புகளை வலுப் படுத்துவதில் அரசாங்கம் அடைந்து ள்ள உறுதியான முன்னேற்றத்தின் பின்னணியில் இந்த அறிவிப்பு வெளி யாவது துரதிஸ்டவசமானது எனவும் இலங்கை தெரிவித்துள்ளது.

இந்த சவால்களிற்கு மத்தியிலும் இலங்கை நல்லிணக்கம் பொருளாதார மீட்சி சமூக பொருளாதார அபிவிரு த்தி போன்றவற்றிற்கான தனது முயற்சி களை தொடரும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் நடிகர் திலகம் சிவாஜியின் நூல் வெளியீட்டில் குழப்பம் விளைவித்த பெண்மணி!




நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற நிலையில் தன்னை ஏற்பாட்டாளர் எனக் கூறிய பெண் ஒருவர் ஊடகங் களை வெளியேறுமாறு கூறியதால் பரபரப்பு ஏற்பட்டது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மூத்த புதல்வர் மற்றும் நூல் ஆசிரியர் ஆகியோர் நூல் வெளியீட்டு விழாவிற்காக யாழ்ப் பாணம் வந்த நிலையில் குறித்த நிகழ்வு யாழ் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

குறித்த நிகழ்வுக்கு ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்ட நிலையில் திடீரென அங்கு நின்ற பெண், சில ஊடகவிய லாளர்களை அடையாள அட்டை காட்டுமாறு வற்புறுத்தினார். இந்நிலை யில் சில ஊடகவியலாளர்கள் நாங்கள் அடையாள அட்டையை காட்டுவதில் பிரச்சனையில்லை. நீங்கள் யார் என் பதை முதலில் கூற முடியுமா என கேள்வி எழுப்ப, நீங்கள் வெளியேறலாம் என குறித்த பெண்மணி கடுந் தொனி யில் எச்சரித்தார்.

இந் நிலையில் அங்கு நின்ற பத்துக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்த நிகழ்வை புறக்கணித்து வெளியேறி னர். அதன் பின் ஏற்பாட்டாளர்கள் சிலர் ஊடகவியலாளர்களை அணுகி நடந்த சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரியது டன் நிகழ்வுக்கு வருமாறு கோரினர்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544




வீட்டின் விலை உயர்வடைகின்றது
வாங்குவதற்கு இதுவே சரியான தருணம்!
உங்கள் வீட்டினை
நியாயமான விலைக்கு வாங்க விரும்பினால் !
Please Call: 416-450-2424
Buying / Selling / Leasing
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க..!
கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்
CONSUMER CHOICE AWARD 2019 GTA EAST
$ 888,000 Scarborough Sheppard & Meadowvale Att/Row/Twnhouse 3-Storey Bedrooms: 3 Washrooms: 3 W/O-Spent $$$$ Renos
$ 899,900 Scarborough Sheppard/Markham/Neilson Detached Bungalow Bedrooms: 3 + 2 Washrooms: 2 Sep Entrance/Beautifully Renovated
$ 799,000 Scarborough Orton Park Rd. & Lawrence Ave. Detached Backsplit 3 Bedrooms: 3 Wrms:1 First Time Home Buyers And Investors
$ 1,268,888 Scarborough Starspray/Lawrence Detached 2-Storey Bedrooms: 4 + 1 Washrooms: 3 Well Maintained And Upgraded
$ 879,000 Scarborough Vic Park And Lynvalley Detached Bungalow Bedrooms: 2 + 1 Washrooms: 2 Sep Entrance/Custom Renovated
$ 999,000 Scarborough Kennady Rd./St.Clair Av. Detached Bungalow Bedrooms: 3 + 3 Washrooms: 3 Sep Entrance
$ 1,399,000 Scarborough Warden And Huntingwood Detached 2-Storey Bedrooms: 3+1 Wrms: 4 Sep Entrance/ Newly Renovated
$ 1,280,000 Markham 16th & Mccowan Rd. Detached 2-Storey Bedrooms: 3 Washrooms: 3 Well maintained
$ 1,388,000 Markham Major Mackenzie & Roy Rainey Markham) Detached 2-Storey Bedrooms: 3 + 1 Wrms: 3 Original Owners Lovingly Maintained
$ 1,200,000 Vaughan Keel /Major Mackenzie Detached 2 - Storey Bedrooms: 3 + 1 Washrooms: 4 Upgraded
$ 999,900 Pickering Brock Rd & Old Brock Rd. Detached 2-Storey Bedrooms: 4 Washrooms: 3 Fully Upgraded & Renovated
$ 849,900 Whitby Winchester/Anderson Rd. Detached 2-Storey Bedrooms: 3 Washrooms: 3 Upgraded
$ 699,800 Oshawa Stevenson/Adelaide Detached Bungalow Bedrooms: 3 + 1 Washrooms: 2 Sep Entrance/Lot: 58 x 130'
$ 595,000 Scarborough Finch Ave./Mccowan Rd. Condo Apartment Bedrooms: 2 Washrooms: 2 Well Maintained
$ 639,900 Scarborough Steeles Ave./Warden Rd. Condo Apartment Bedrooms: 2 + 1 Washrooms: 2 1685 Sf/Corner Unit
(Mortgage) அடமான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்
கமல் நவரட்ணம்
KAMAL NAVARATNAM
Sales Representative
Direct:
416-450-2424
E mail:kamal@kamalrealtor.ca
www.kamalrealtor.ca
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222
Fax: 416-282-4488
1265 Morningside Ave., Suite 203, Toronto, ON M1B 3V9
KAMAL NAVARATNAM REAL ESTATE
Trusted and reliable services

# வடக்கு -கிழக்கு இயல்பு இழந்தது!

தமிழ்த் தேசிய கட்சிகளின் அழைப்பின் பேரில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 25 ஏப்ரல் 2023 செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட பொது முடக்கப் போராட்டத்தால் மக்களின் இயல்பு வாழ்வு முற்றாகப் பாதிக்கப்பட்டது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்த்தும் தமிழர் பகுதிகளில் மேற் கொள்ளப்படும் ஆக்கிர மிப்பு மற்றும் மரபுரிமை கள் அழிப்பைக் கண்டித் தும் ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து பொது முடக்கத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.

### யாழ்ப்பாணத்தில்

பொது முடக்கப் போராட்டத்தால் யாழ்ப்பாணம் மாநகரம், சுன்னாகம், சங்கானை, சாவகச்சேரி, கொடி காமம், பருத் தித்துறை, நெல்லியடி என்று முக்கிய நகரங்கள் மற்றும் ஏனைய இடங்களிலும் வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள், தனியார் நிறுவன ங்கள் என அனைத்தும் மூடப் பட்டிருந்தன.

தனியார் போக்குவரத்துசேவை முற்றாக இயங்க வில்லை. இதனால் நகரங்களில் பேருந்து நிலையங் கள் சோபை இழந்திருந்தன. அரச பேருந்து சேவை இயங்கிய போதிலும் அதிகமான பேருந்துகள் வெறு மையாகவே பயணித்தன. பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லாதமையால் அவையும் இயங்க வில்லை. தனியார் கல்வி நிறுவனங்களும் மூடப்படி ருந்தன.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பில் பொது முடக்கப் போராட்டத்துக்கு பேராதரவு கிடைத்துள்ளது. வழக்கமாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளே ஹர்த்தால் போராட்டத்துக்கு ஆதரவளிப்பது வழக்கம். ஆனால் இம்முறை முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி பிரதேசங்களிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. தவிர தமிழ் மக்கள் அதிகம் வாழும் மட்டக்களப்பு நகரம், படுவான்கரை, கொக்கட்டிச்சோலை, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி பிரதேசங்கள் வழமை போன்று முற்றாக முடங்கின.

### கிளிநொச்சி -மன்னார்

கிளிநொச்சி, மன்னார் நகரங்களில் வர்த்தக நிலை யங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. சிறு நகரங் களின் கடைகளும், பொதுச் சந்தைகளும் கூட இயங்கவில்லை. பாடசாலைகள், தனியார் போக்கு வரத்து சேவைகளும் இடம்பெறவில்லை. மன்னாரில் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளிலும் கடைகள் அடைக்கப்பட்டு போராட்டத்துக்கு ஆதரவு வழங்க ப்பட்டது.

### முல்லைத்தீவு -வவுனியா

முல்லைத்தீவு நகரம், புதுக்குடியிருப்பு, முள்ளிய வளை என அனைத்து நகரங்களிலும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. இதேபோன்று வவுனியா நகரிலும் முஸ்லிம்களின் வர்த்தக நிலை யங்கள் உட்பட அனைத்தும் முடங்கின. பாடசாலை களும் இயங்கவில்லை. எனினும் அரச பேருந்துகள் வழமை போன்று சேவையில் ஈடுபட்டன. இவ்வாறு சேவையில் ஈடுபட்ட பேருந்து ஒன்றின் மீது முல்லைத்தீவில் கல்வீச்சுக்கு இலக்கானமையும் குறிப்பிடத்தக்கது.

### திருகோணமலை

திருகோணமலை நகரம் முற்றாக முடங்கிக் காணப் பட்டது. நகரத்தில் முஸ்லிம் மக்களும் கடைகளை பூட்டி ஆதரவு வழங்கினர். மற்றும்படி தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகள் முற்றாக முடங்கின. பாடசாலைகளும் இயங்கவில்லை. எனினும், போக்கு வரத்து சேவைகள் பெருமளவில் பாதிக்கப்பட வில்லை.

### அம்பாறை

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் காரைதீவு, பாண்டிருப்பு அக்கரைப்பற்று போன்ற பகுதிகளி லேயே ஓரளவு இயல்புநிலை பாதிக்கப் பட்டிருந்தது. எனினும் கல்முனை, அக்கரைப்பற்று நகரம், மருதமுனை, சாய்ந்தமருது என முஸ்லிம் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் இயல்பு நிலை பாதிக்கப்படவில்லை

### நன்றி தெரிவிப்பு

கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு கிழக்கு மாகா ணங்களில் முன்னெடுக்கப்பட்ட முழுமுடக்கப் போராட்டம் முழுமையான வெற்றியைப் பதிவு செய்துள்ளது. இதற்கு ஆதரவளித்த அனைவருக் கும் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த தமிழ்த் தேசிய பரப்பில் அரசியல் பணியாற்றி வரும் ஏழு கட்சிகளும் (22ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் பதிவுகள்...





யாழ்ப்பாணம்



சாவகச்சேரி



வடமராட்சி






முல்லைத்தீவு




கிளிநொச்சி




வவுனியா

திருகோணமலை




மட்டக்களப்பு



மன்னார்

# வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரரின் உடைக்கப்பட்ட சிலைகள் மீண்டும் பிரதிஷ்டை செய்ய நீதிமன்றம் அனுமதி!

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து வழிபாடு மேற்கொள்ள முடியுமென வவுனியா மாவட்ட நீதிமன்றம் நேற்று 27 ஏப்ரல் 2023 வியாழக்கிழமை உத்தரவிட்டது.

அத்துடன் ஆதிலிங்கேஸ்வரர் சிலைகளை உடைத்தவர்கள் யார் என்பதை கண்டறிந்து உடனடியாக அவர்களை கைது செய்ய வேண்டுமென்றும் பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆதிலிங்கேஸ்வர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள முடியுமென கடந்த 24ஆம் திகதி உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்கு விசாரணையை இன்று வரை ஒத்தி வைத்திருந்தது. நேற்று தொல்லியல் திணைக்களமும் நீதிமன்றில் முன்னிலையாகி, சிலைகள் மீள பிரதிஷ்டை செய்வதில் ஆட்சேபனையில்லையென அறிவித்தனர்.



இதையடுத்து, இன்று வெள்ளிக்கிழமை வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர் ஆலயத்தில் சிலைகள் மீள பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்,

வெடுக்குநாரி மலையில் வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்கனவே நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், வியாழக்கிழமை (27) அங்கு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும், விக்கிரகங்கள் இன்றி அங்கு வழிபாடுகள் நடத்தப்பட்டமை தொடர்பிலும், வெடுக்குநாரி மலையிலிருந்த திருவுருவ சிலைகள் மற்றும் பூஜை பொருட்கள் ஆகியன பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த சமர்பணங்களை ஆராய்ந்த வவுனியா நீதவான், வெடுக்குநாரி மலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட விக்ரகங்களை அதே இடத்தில் மீண்டும் பிரதிஸ்டை செய்யுமாறும், பூஜை பொருட்களை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தொல்லியல் திணைக்களத்தின் மேற்பார்வையுடன் திருவுருவச் சிலைகள் மீள பிரதிஸ்டை செய்யப்பட வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலும், பூஜை வழிபாடுகளுக்கு எவ்வித இடையூறுகளையும் விளைவிக்காதிருப்பதற்கும், அங்கு பாதுகாப்பு மேற்பார்வைகளை மாத்திரம் மேற்கொள்வதற்கும் பொலிஸாருக்கு நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெடுக்குநாரி மலையிலிருந்த விக்கிரகங்கள் சேதப்படுத்தியமையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதை துரிதப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ் மாநகர சபையை வடமாகாண ஆளுநர் வெளியேற பணித்தமைக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் விதித்த இடைக்கால கட்டளை மே மாதம் 29ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

26 ஏப்ரல் 2023 புதன்கிழமை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டபோதே நீதிமன்றம் இடைக்கால கட்டளையை நீடித்து உத்தரவிட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் யாழ் மாநகர சபையினை நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து வெளியேற பணித்ததுடன் அதனை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு எதிராக யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் தாக்கல் செய்த வழக்கில் யாழ் மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் ஆஜராகியிருந்த போதே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம் ஏப்ரல் 4ம் திகதி இந்த இடைக் காலக் கட்டளையை பிறப்பித்து குறித்த வழக்கு புதன்கிழமை ஒத்திவைத்தது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அரச சட்டவாதி தரப்பில் இடைக்கால கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இதனை ஆராய்ந்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இடைக்கால கட்டளையை நீடித்து வழக்கை மே 29ம் திகதி வரை ஒத்திவைத்தார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# கச்சதீவில் புத்தர் சிலை அகற்றப்பட்டதாக கடற்படையினர் யாழ்.ஆயருக்கு தெரிவிப்பு!

புனித அந்தோனியார் திருத்தலம் அமைந்துள்ள கச்சதீவில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு விட்டதாக எமக்கு நம்பகரமான செய்திகள் கிடைத்துள்ளன என்பதை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

இவ்விடயத்தை கடற்படையின் உயர் அதிகாரிகள் ஆயர் இல்லத்துக்கு அறிவித்துள்ளார்கள். அங்கு அமைக்கபட்டிருந்த புத்தர் சிலை அகற்றப்பட்டு கச்சதீவுக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கச்சதீவில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும் இவ்விடயத்தில் தாங்கள் கவனமெடுத்து கச்சதீனின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட ஆவன செய்யுமாறும் கேட்டு நாம் கடந்த 27-03-2023ல் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். இதற்கமைய தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்..

இவ்விடயத்தை அமைதியான முறையில் தீர்த்துவைக்க ஒத்துழைத்த கடற்படை உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் கச்சதீவின் பாரம்பரியமும் தனித்துவமும் பேணப்பட குரல் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.



# பௌத்தத்தைப் பாதுகாக்கவே தொல்பொருள் திணைக்களம்



பௌத்தத்தை பாதுகாக்கவே தொல்பொருள் திணைக்களம் செயற்படுவதாகவும், அதன் இலட்சினையும் அவ்விடயத்தையே பிரதிபலிக்கிறது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் பாராளுமன்றில் தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினையில் தாகபையும், தர்மச்சக்கமும் மட்டுமே உள்ளது. அது பௌத்தசாசன அமைச்சின் சின்னமா என்று எண்ணத் தோன்றுகிறது. தொல்பொருள் திணைக்களம் ஒரு மதத்தை மாத்திரமே பிரதிபலிக்கிறது. அந்த திணைக்களம் எதனை பாதுகாக்க முயல்கிறது என்பதை அதன் இலட்சினை பிரதிபலிக்கிறது. அது ஏனைய மத அடையாளங்களை அளிக்க முயல்கிறது.

வெடுக்குநாறி மலை மத சின்னங்கள் அழிப்பு தொடர்பான வழக்கில் முன்னிலையாகும் சட்டத்தரணி என்ற வகையில் விடயமொன்றை கூற விரும்புகிறேன். தற்போது அங்குள்ள இந்து மத சின்னங்கள் அளிக்கப்பட்டுள்ளன. முன்னதாக, அங்கு வழிபாடுகளை தடுக்கும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அதற்கு எதிராக பல வழக்குகளும் தொடரப்பட்டன. எனினும், அவர்களால் அதனை தடுக்க முடியவில்லை. தற்போது, ஜீப்களில், கட்டை காற்சட்டை அணிந்து வந்த இனந்தெரியாதோரால் மத சின்னங்கள் தாக்கியழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர, அவ்வாறான மத சின்ன அழிப்புக்கு இந்த அரசாங்கம் இடமளிக்கவில்லை. இது முற்றிலும் பொய்யான கருத்து என்றார்.

தொல்பொருள் திணைக்களத்தின் இலட்சினை, இன்று நேற்று அல்ல அது பல வருடங்களுக்கு முன்னதாக உருவாக்கப்பட்டதொன்று. எனவே, எந்த மதத்துக்கும் நாம் வேறுபாடுகளை காட்டுவதில்லை என்றார்.

இதனையடுத்து, கேள்வியெழுப்பிய சுமந்திரன், இந்த இலட்சினையை தற்போது மாற்றுமாறு கோரிக்கை விடுத்தார். அதற்கு பதிலளித்த அமரவீர, பாராளுமன்றில் இது குறித்து பிரேரணையொன்றை கொண்டு வருமாறு அறிவித்ததுடன், விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதாகவும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய சுமந்திரன், தாம் வன்முறையை விரும்பவில்லை என்றும், அரசாங்கத்தின் இனவாத நோக்கிலான செயற்பாடுகள் களையப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கஞ்சாக் கடத்தல் வழக்கில் சிங்கப்பூரில் தங்கராஜ் சுப்பையா தூக்கிலிடப்பட்டார்

உலகளவில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் குற்றங்களுக்கு எதிராக கடுமையான சட்டங்களைப் பின்பற்றும் சிங்கப்பூர் அரசு, ஒரு கிலோ கஞ்சா கடத்தல் வழக்கில் தமிழர் ஒருவருக்கு, சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கோரிக்கைகளை மீறி மரண தண்டனையை நிறைவேற்றியிருக்கிறது.

முன்னதாக கடந்த 2018இல் ஒரு கிலோ கஞ்சா கடத்திய வழக்கில் இந்தியா தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தங்கராஜ் சுப்பையா என்பவரைச் சிங்கப்பூர் நீதிமன்றம் குற்றவாளி எனது தீர்ப்பளித்தது.

அதோடு, கஞ்சா கடத்தல் வழக்கில் மரண தண்டனை விதிப்பதற்கான குறைந்தபட்ச அளவை விடவும் தங்கராஜ் இரண்டு மடங்கு அதிகமாக வைத்திருந்ததாக அவர் மீதான மரண தண்டனையை நீதிமன்றம் உறுதி செய்தது. நீதிமன்றத்தின் இத்தகைய தீர்ப்புக்கு மனித உரிமை அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளிலிருந்து கடும் எதிர்ப்புகளும், மரண தண்டனையை நீக்குமாறு கோரிக்கைகளும் வந்தன.



தங்கராஜீவின் குடும்பத்தினர், தங்கராஜ் எந்தத் தவறும் செய்யவில்லை என்றும், இதில் நியாயமான விசாரணை நடக்கவில்லை என்றும் குற்றம் சாட்டியிருந்தனர். அதோடு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அலுவலகம், தங்கராஜீக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை அவசரமாக மறு பரிசீலனை செய்யுமாறு சிங்கப்பூர் அரசைக் கேட்டுக்கொண்டது. கூடவே, ஜெனீவாவை (22ம் பக்கம் பார்க்க)

# பௌத்தத்தின் மீதான பா.ஜ.க.வின் ஈடுபாடு?

சர்வதேச பௌத்த மகாநாடு கடந்த 20, 21ஆம் திகதிகளில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் புதுடில்லியில் இடம்பெற்றது. தற்கால சவால்களுக்கான பதில் தத்துவமும் நடைமுறையும் என்னும் தலைப்பில் மேற்படி மகாநாடு இடம்பெற்றது.

புத்தரின் சிந்தனைகளை முன் கொண்டு செல்வதில் இந்தியா அர்ப்பணிப்புடன் இருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்திருந்தார். நரேந்திர மோடி இலங்கைக்கு வந்த போது பௌத்த மதத் துறவிகளுக்கு பெருமம் கௌரவமளித்திருந்தார். அவர்களின் காலில் விழுந்து வணங்கியிருந்தார்.

இந்து மதத் துறவிகளுக்கு வழங்கும் கௌரவத்தை பௌத்த பிக்குகளுக்கு வழங்கியிருந்தார். ஆனால், மோடியின் அணுகுமுறைக்கு பின்னாலுள்ள உண்மையான விடயம் வேறு.

அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக உள்நாட்டுக்குள் இந்துத்துவா தேசியவாதத்தை உச்சமாக கையாளும் அணுகுமுறையையே பா.ஜ.க. தலைமையிலான அரசாங்கம் கையாண்டு வருகின்றது.

அதேவேளை, இந்தியாவின் அயல்நாடுகளை கையாளும் வெளிவிவகார அணுகுமுறையில் பௌத்தத்தை ஒரு துருப்புச் சீட்டாக மோடி அரசாங்கம் கைக்கொள்ள முற்படுகின்றது. அதாவது பா.ஜ.க. இந்தியாவைப் பொறுத்தவரையில் பௌத்தம் ஒரு மென் இராஜதந்திர கருவியாக இருக்கின்றது.

இதன் மூலம் நேபாளம், இலங்கை போன்ற நாடுகளை கையாள முடியுமென்று மோடி இந்தியா கருதுவதாகத் தெரிகின்றது. இது நடைமுறையில் எந்தளவு வெற்றிகரமானதென்னும் கேள்விகள் இருந்தாலும் கூட பா.ஜ.க. இந்தியா இதனை ஒரு கருவியாகக் கையாளும் கொள்கை நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றதென்பது வெள்ளிடைமலை.

ஆனால், இலங்கையின் சிங்கள பௌத்தர்கள் புத்தரின் போதனைக்கு ஏற்ப இல்லையென்பது தான் உண்மை. இந்த விடயம் தொடர்பில் பா.ஜ.க. கரிசனை கொள்கின்றதா? வடக்கு, கிழக்கில் இந்துத்துவா அணுகுமுறையை கைக்கொள்ள முடியுமென்று நம்பும் ஈழத்து சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் போன்றவர்கள் இந்த உண்மையை எந்தளவுக்கு பா.ஜ.கவின் தலைவர்களின் கரிசனைக்குக் கொண்டு சென்றிருக்கின்றார்கள்?

யாழ்ப்பாணத்துக்கு வந்து செல்லும் பா.ஜ.கவின் தமிழ்நாட்டு தலைவர் அண்ணாமலை எந்தளவுக்கு இந்த விடயங்களைப் புரிந்து வைத்திருக்கின்றார்? அண்மையில், தமிழ்நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த கிறிஸ்தவ மதப் பிரசார குழுவினரை தடுத்து நிறுத்தியதை ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'ஓகனைசர்' பாராட்டியிருக்கின்றது.

ஆனால் மறுபுறம் வடக்கு கிழக்கிலுள்ள இந்துக் கோவில்களின் பாதுகாப்பு மற்றும் உயர்ச்சி தொடர்பில் இந்துத்துவா தரப்புகள் பிரதான கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அவ்வாறாயின், ஈழத்து இந்துக்களையும் இலங்கையின் சிங்கள பௌத்தர்களையும் ஒரே மாதிரியாகவே பா.ஜ.க. நோக்குகின்றதா? ஏனெனில், இந்துக் கோவில்கள் தொடர்பில் அண்ணாமலை போன்றவர்கள் பிரத்தியேக கவனம் செலுத்தியதற்கு சான்றில்லை.

வெறுமனே கிறிஸ்தவ மதமாற்றிகளை இலக்கு வைத்து செயல்படுவதன் மூலம் மட்டும் இந்துக்களின் இருப்பை பாதுகாத்து விட முடியுமா? வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில், இந்துக்களின் பாரம்பரிய இடங்களை பாதுகாப்பதென்பது தமிழ் மக்களின் இருப்புடன் தொடர்புபட்டது.

தமிழ் மக்களின் இருப்பையும் இந்துக்களின் அடையாளங்களையும் பிரித்து நோக்க முடியாது.

வடக்கு கிழக்கின் தொல்பொருள் சான்றுகள் என்பது, அடிப்படையில் இந்துக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்ட ஒன்றுதான்.

இதனை சிலர் சைவமென்றும் அடையாளப்படுத்திக் கொண்டாலும்கூட உலகளாவிய கண்ணோட்டத்தில் இந்துக்கள் என்னும் அடையாளத்தின் ஊடாகவே ஈழத்தின் பெரும்பான்மையான தமிழ் மக்கள் நோக்கப்படுவர்.

இந்துக்கள் விடயத்தில் இந்தியாவின் பிரதான கரிசனையை ஈர்க்க முடியாவிட்டால் இந்துத்துவா அணுகுமுறைக்கான நியாயம் பலவீனமான ஒன்றாகவே நோக்கப்படும்.

# வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயம் தொடர்பில் வவுனியா நீதிமன்றம் பிறப்பித்த அதிரடி உத்தரவு!



வெடுக்குநாறி பிரதேசத்திலே வணக்கங்களை நடத்துவதற்கு பக்தர்கள் செல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்க கூடாது என்ற உத்தரவு வவுனியா நீதிவான் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்டு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த வழக்கில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் வழக்கின் தீர்ப்புகள் தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

வெடுக்குநாறி மலையில் ஆதி லிங்கேஸ்வரர் சிலைகளை உடைத்தது சம்பந்தமான வழக்கு நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் பொலிஸார் இனந்தெரியாத நபர்களினால் வணக்கத்திற்குரிய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பாக தகவல் கொடுத்துள்ளார்கள். ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை. யாரென்று தெரியாது தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பதாக சொல்கின்றனர்.

கடந்ததினத்தில் மேலதிகமாக அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டதற்கமைவாக குறித்த இடத்தில் நீண்ட காலமாக பூசை வழிபாடுகள் இடம் பெற்றமைக்கான புகைப்பட ஆதாரங்களை அவர்களே சமர்ப்பித்துள்ளனர். அதுமட்டுமன்றி இது தொல்லியலுக்குரிய பிரதேசமென்றும் இன்று நாங்கள் செய்த விண்ணப்பத்திற்கு பதில் அளிப்பதற்கு அரச சட்டத்தரணியும் உதவியை நாடியுள்ளதாகவும் அதற்காக பிறிதொரு தினத்தையும் கேட்டிருந்தார்கள்.

எமது அரசியலமைப்பின் 10 ஆம் 14:1 உ உறுப்புரைகளின் கீழ் மத வழிபாடு என்பது எவராலும் மட்டுப்படுத்த முடியாத உரிமைகள். மரத்தையோ, கல்லையோ வழிபடலாம் அதற்கு பூரண உரித்துள்ளது. அந்த மரம் வனப்பிரதேசத்தில் இருப்பதால் வணங்க முடியாது என எவரும் கூறமுடியாது. ஒரு கல் தொல்லியலுக்குரியது என்பதற்காக அதனை வணங்க முடியாது என எவரும் கூற முடியாது.

அவ்வாறு சொல்வதாக இருந்தால் அனுராதபுரத்திலும், பொலன்நறுவையிலும் சென்று எவரும் வழிபட முடியாது. இந்த விடயங்கள் இன்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் நீதவான் இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளார்.

அதாவது வெடுக்குநாறி பிரதேசத்திலே வணக்கங்களை நடத்துவதற்கு பக்தர்கள் சொல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்க கூடாது என்ற உத்தரவு கொடுக்கப்பட்டு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடைக்கப்பட்ட சிலைகளை மீள கட்டுவது சம்பந்தமாக தொல்லியல் பிரதேசம் என்ற காரணத்தினாலே மீள் அமைப்பதும் தொல்லியல் என்ற காரணத்தினாலும் அரச சட்டத்தரணியும் வந்த பிறகு ஒரு விண்ணப்பத்தை செய்வதாக சொல்லியிருக்கின்றேன் என தெரிவித்தார்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி மனோண்மணி பாலசுந்தரம்



கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய முன்னாள் ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 03 மே 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# நெடுந்தீவில் 75 வயதைக் கடந்த 5 மூதாட்டிகள் காட்டுமிராண்டிகளால் படுகொலை! ஒருவர் கைது!

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து வெட்டு காயங்களுடன் 3 பெண்கள் மற்றும் 2 ஆண்கள் என ஐவர் சடலங்களாக கடந்த 22 ஏப்ரல் 2023 சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளார். 100 வயதான கனகம் பூரணம் எனும் மூதாட்டி பலத்த வெட்டுக் காயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லண்டன் பிரஜாவுரிமை பெற்ற வேலாயுதம்பிள்ளை நாகேந்திரரத்தினம் (வயது 78) யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களான நாகநதி பாலசிங்கம் (வயது82) பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை (வயது 76) கார்த்திகேசு நாகேஸ்வரி (வயது 83) , மகாதேவன் (வயது 75) என்பவர்களே சடலங்களாக இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நெடுந்தீவு மாவளி இறங்குதுறைக்கு அருகில் உள்ள வீட்டில் வசிக்கும் மூதாட்டியொருவர் நெடுந்தீவுக்கு செல்வோருக்கு தங்குமிட வசதிகளை வழங்குதல் ,உணவு வழங்குதல் போன்றவற்றை தொழிலாக செய்து வந்துள்ளார். இவரது கணவர் 1986ஆம் ஆண்டு குமுதினி படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்ட பின்னர் குறித்த மூதாட்டி தனது வாழ்வாதாரத்தை தானே கொண்டு நடாத்தி வந்துள்ளார்.

நெடுந்தீவில் உள்ள ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கு யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மற்றும் புலம்பெயர் நாடொன்றில் இருந்து வந்திருந்த ஐவர் கடந்த வெள்ளிக்கிழமை (21)நெடுந்தீவு சென்று இறங்குதுறைக்கு அருகில் உள்ள குறித்த மூதாட்டியின் வீட்டில் தங்கியுள்ளனர்.



இந்நிலையில் குறித்த வீட்டில் இருந்து மறுநாள் சனிக்கிழமை காலை எவரும் வெளியே வராததால் சந்தேகம் அடைந்த அயலவர்கள் வீட்டிற்கு சென்று பார்த்த போது வெட்டு காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டுள்ளனர். ஒருவர் வீட்டின் வெளியேயும் ஏனையவர்கள் வீட்டின் உள்ளே படுக்கை மற்றும் ஏனைய பாகங்களிலும் கொடூரமான வெட்டு காயங்களுடன் சடலங்களாக காணப்பட்டனர்.

அதில் ஒருவர் படுகாயங்களுடன் காணப்பட்ட நிலையில் அவரை மீட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதித்தனர். சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்து பொலிஸ் குழு நெடுந்தீவு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

**4 அடங்கிய கும்பலகளே படுகொலை செய்தது?**

நால்வர் கொண்டே கும்பலே படுகொலையை செய்துள்ளதாகவும் வீட்டின் சற்று தூரத்தில் முன் பகுதியில் கடற்படை முகாம் அமைந்துள்ளமையால் , வீட்டின் பின் பகுதி ஊடாகவே கும்பல் வீட்டினுள் புகுந்து இருக்கலாம் எனவும் வாள்கள் மற்றும் கோடரி போன்ற பயங்கர ஆயுதங்களால் தாக்கியே படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில்











தெரிய வந்துள்ளது.

**படகுச்சேவைகள் அன்றையதினம் நிறுத்தம்**

நெடுந்தீவில் இருந்து குற்றவாளிகள் தப்பி செல்லாதவாறு நெடுந்தீவு குறிகாட்டுவான் இடையிலான படகு சேவைகள் இரண்டு நாட்கள் இடை நிறுத்தப்பட்டது.

ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கஜநிதிபாலன் நெடுந்தீவுக்கு நேரில் சென்று சம்பவ இடத்தினை நேரில் பார்த்து விசாரணைகளை முன்னெடுத்தார். அதேவேளை யாழ்ப்பாண தடயவியல் பொலிஸ் குழுவும், சட்ட வைத்திய அதிகாரியும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

**நீதிபதியை வழிமறித்த பொதுமக்கள்**

சம்பவம் இடம் பெற்ற வீட்டில் விசாரணைகளை முடித்துக் கொண்டு நெடுந்தீவு இறங்கு துறைக்கு வந்த நீதவானை வழிமறித்து மக்கள் போராட்டம் நடாத்தினார்கள். குற்றவாளிகளை உடனடியாக கண்டறிந்து அவர்களுக்கு உயர்ந்தபட்ச தண்டனையை வழங்க வேண்டும் எனவும் , நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரி போராட்டம் செய்தனர். நீதவான் சட்ட வைத்திய அதிகாரி சம்பவ இடத்தில் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்காக சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்குப் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

**அமைச்சர் டக்ளஸ் பணிப்பு**

வட மாகாணத்திற்கான பிரதிப் பொலிஸ் மா அதிபருடன் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நெடுந்தீவு பகுதியில் சந்தேகத்திற்கு இடமான நடமாட்டங்கள் தொடர்பாகவும், அன்று நெடுந்தீவை விட்டு வெளியேறியவர்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கியதுடன், இக்கொலைகள் தொடர்பான உண்மைகள் கண்டறியப்பட்டு, மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அச்சத்தினை விரைவில் களைய வேண்டிய அவசியத்தினையும் வலியுறுத்தியுள்ளார்.

**பிரதான சந்தேக நபர் கைது!**

நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை கொடூரமாகக் கொலை செய்து விட்டு தப்பி புங்குடுதீவில் தலைமறைவாகியிருந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்களின் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பணம் தேவை என்பதனால் அவர்கள் அணிந்திருந்த நகைளை அபகரிக்க முடிவெடுத்தேன். தனியாக நகைகளை கொள்ளையிட்டால் பிடித்து விடுவார்கள், சம்பவத்தை திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன் என்று கைது செய்யப்பட்டவர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். சந்தேக நபரிடமிருந்து 26 தங்கப் பவுண் நகைகள், ஆடைகள் மற்றும் அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுல செனரத்தின் கட்டளையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விஷாந்தின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெடுந்தீவில் நடமாடிவிட்டு 22 ஆம் திகதி காலை அங்கிருந்து வெளியேறிச் சென்ற நபரை புங்குடுதீவில் வைத்து 22 ஆம் திகதி இரவு கைது செய்தனர். ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறிந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு 51 வயது நபரே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து அதிகளவு தங்கநகைகள் கைப்பற்றப்பட்டன. அது தொடர்பில் விசாரணை மேற் கொண்ட போதே சந்தேக நபர் தானே கொலை செய்ததாக ஒப்புக் கொண்டார்.

நான் நெடுந்தீவு வந்தால் குறித்த வயோதிபர்களின் வீட்டில்தான் தங்கிச் செல்வேன். அதுபோன்று கடந்த சில தினங்களுக்கு முன் வந்து தங்கியிருந்தேன். அங்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர். அனைவரது நகைகளையும் அபகரித்து விற்பனை செய்து வரும் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்கு செல்ல திட்டமிட்டேன்.

அதனால் 22 ஆம் திகதி அதிகாலை 4.30 பின்னர் நித்திரையிலிருந்த அனைவரையும் கொலை செய்து விட்டு நகைகளை எடுத்துக் கொண்டு தப்பிக்க எண்ணினேன். நகைகளை மட்டும் அபகரித்துச் சென்றால் பொலிஸார் எளிதில் பிடித்துவிடுவார்கள், அதனால் பொலிஸ் விசாரணையை திசை திருப்ப அனைவரையும் கொலை செய்தேன்' என்று சந்தேக நபர் பொலிஸ் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் 24 ஏப்ரல் 2023 திங்கட்கிழமை சந்தேக நபரை சம்பவம் இடம் பெற்ற வீட்டிற்கு அழைத்து சென்ற பொலிஸார், சம்பவ இடத்தில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்ததுடன் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட கத்தி மற்றும் கொலை செய்யும் போது உடுத்தியிருந்த சாரம் என்பவற்றை குறித்த வீட்டின் கிணற்றில் இருந்து பொலிஸார் மீட்டு இருந்தனர்.

அதனை அடுத்து மேலதிக விசாரணைகள் முடிவடைந்த நிலையிலும் மன்றினால் வழங்கப்பட்ட 48 மணிநேர அவகாசம் முடிவடைய இருந்த நிலையில் 25 ஏப்ரல் 2023 செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் சந்தேகநபரை முற்படுத்தினர். அதனை அடுத்து சந்தேகநபரை எதிர்வரும் 09ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் தொடருமானால், புலம்பெயர்ந்தவர்கள் இனி தாயகத்துக்கு வருவதையே ஆபத்தானதாகக் கருதத் தொடங்கி விடுவார்கள். ஆரம்பத்திலேயே இது போன்ற சம்பவங்கள் தொடராமல் இருப்பதற்கான நடவடிக்கையை எடுத்தாக வேண்டும். ஆனால், எவ்வாறு இதனை தடுக்கலாம் என்பது பற்றியோ அல்லது அதனை தடுக்க வேண்டும் என்று சிந்திப்பதற்கோ யாரும் இருப்பார்கள் என்றும் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.



எங்கே போகின்றது நமது மண் என்று அங்கலாய்ப்பதைத் தவிர வேறு எதனையும் செய்ய முடியவில்லை.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

15 ஏப்ரல் 2023 முதல் 21 ஏப்ரல் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி முத்துக்குமாரு இரத்தினம்

புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முத்துக்குமாரு இரத்தினம் அவர்களுடைய ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 27 ஏப்ரல் 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி முத்துக்குமாரு இரத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தியாகரூபன் தியாகராஜா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தியாகரூபன் தியாகராஜா அவர்களுடைய 8வது ஆண்டு நினைவு நாள் 28 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தியாகரூபன் தியாகராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புவனேஸ்வரி இராஜதுரை

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி இராஜதுரை அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 27 ஏப்ரல் 2023 வியாழக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி புவனேஸ்வரி இராஜதுரை அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நன்னித்தம்பி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களின் 24வது ஆண்டு நினைவு நாள் 22 ஏப்ரல் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் இரத்தினவடிவேல்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், தும்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 22 ஏப்ரல் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 83வது பிறந்தநாள் நினைவாக

### செல்வி ருக்மணிதேவி முத்தையா



யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த அமரத்துவச் செல்வி ருக்மணி தேவி முத்தையா அவர்களது 83வது பிறந்த நன் நாள் 30 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அவரது நினைாவக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் அமரத்துவச் செல்வி ருக்மணி தேவி முத்தையாவின் 83வது பிறந்த நாளில் அவரது பெயரால் உணவு வழங்குவதையிட்டு அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் அவரது குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



21 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கிருஷ்ணபிள்ளை ஆறுமுகம் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



22 ஏப்ரல் 2023 சனிக்கிழமை அட்சயதிருதி உபயமாக கனடாவில் வசிக்கும் திரு திருமதி துஷியந்தன் இந்துகா தம்பதிகள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கினார்கள்.



22 ஏப்ரல் 2023 சனிக்கிழமை புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களது 24வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



22 ஏப்ரல் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ஸ்ரீகுமார் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அம்ஷயன் (13வது பிறந்த நன்நாள்) செல்வப்புதல்வன் அக்ஷயன் (16வது பிறந்த நன்நாள்) செல்வப்புதல்வி ஸ்ரீதேவி (23வது பிறந்த நன்நாள்) ஆகியோரது பிறந்த நன்நாளுக்காக அவர்கள் தமது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



22 ஏப்ரல் 2023 சனிக்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் தம்பலை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் இரத்தினவடிவேல் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியைச் சேர்ந்த ஜனா என்று அன்பாக அழைக்கப்படும் ஐங்கரன் யோகசுந்தரம் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



27 ஏப்ரல் 2023 வியாழக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி இராஜதுரை அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



27 ஏப்ரல் 2023 வியாழக்கிழமை புங்குடுதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி முத்துக்குமாரு இரத்தினம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



27 ஏப்ரல் 2023 வியாழக்கிழமை சீரடிபாபா உபயமாக கனடாவில் வாழும் திரு சுதர்சன் கதிரவேலு அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



28 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமை வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நாகரெத்தினம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தியாகரூபன் தியாகராஜா அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகரெத்தினம் முருகேசு

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 28 ஏப்ரல் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா ஜெயரட்ணம்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா ஜெயரட்ணம் அவர்களின் 11வது ஆண்டு நினைவு நாள் 03 மே 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு கந்தையா ஜெயரட்ணம்அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


யாழ் இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா
JAFFNA HINDU COLLEGE ASSOCIATION - CANADA
Proudly Presents
ANNUAL
GALA DINNER 2023
APRIL 29th 2023 @ 6:00PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE E, SCARBOROUGH, ON M1T 3T4
கட்டுண்ட நாட்கள்போய்
களிப்போடு சேரும்நேரம்
அறனறிந்தோர் | மூத்த அறிவுடையோர் | நெஞ்சத்து நண்பர்கள்
Vithusayni
Ella Moris
OUR MCs
Abissheka
KR Krishna
DUET
Sarika
Gobiraj
Gold Sponsor
Lucaaa KITCHENS
Platinum Sponsor
thairoomgrand Thai & Malaysian Cuisine
Gabby's
Silver Sponsor
3K SHAMI
CONTACTS: ARAVINTHAN - 416 843 6234 | KUGATHASAN - 416 558 5939 | RAVEENDRA - 416 230 0360 | MATHIALAGAN - 416 277 1067

அல்பியன் பதியில் கோயில்கொண்டருளியிருக்கும்

# அருள்மிகு கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

## மகோற்சவ விஞ்ஞாபனம் 2023



மாரிதேவி தியானம்
அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கரண்டம்
டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்
அரவ மண பூக்தம் ஹாகேயூர பூஷ்யம்
அகில புவன மாதா மாரிகாதேவி சிவதயம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் சித்திரைத்திங்கள் 7ம் நாள் (20.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவினி நட்சத்திரமும் பிரதமை திதியும் கூடிய சுபவேளையில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். அடியவர்கள் உற்சவ காலங்களில் ஆலயம் வந்து அம்பிகையை தரிசித்தல் உத்தமோத்தம புண்ணியமாகும்.

| | |
|---|---|
| 19-04-2023 புதன் | வருடாந்த மகோற்சவ கிரியைகள் ஆரம்பம். விக்னேஸ்வர, மூலமூர்த்தி, உற்சவமூர்த்தி, அஸ்திரதேவி, சிம்ம, அனுக்ஞைகள். கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம் |
| 20-04-2023 வியாழன் | காலை விசேட புண்ணியாக வாசனம், ரக்ஷாபந்தனம், பேரிதாடனம், வசந்தமண்டபபூசை, அஸ்திரதேவியோடு துவஜபட வீதி பிரதக்ஷணம், மூல சிம்ம பூசை, தம்ப பிரதிஷ்டை, துவஜபட அபிசேகம், சண்டிகா தேவி ஆவாகனம், யாத்ரா தானம், துவஜாரோகணம் (கொடியேற்றம்), கணபதி தானம், சிம்ம தானம், அஸ்திரதேவி ஆவாகனம், பலிபீட பிரதிஷ்டை, மகாசீர்வாதம், வீதி பிரதக்ஷணம், நவசந்தியாவாகனம், இரவு: யாகாரம்பம் |
| 04-06-2023 வியாழன் | காலை: யாகாங்குர விஸர்ஜனம், சூர்ணோற்சவம், விசேட தீர்த்த தொட்டியில் அஸ்திரதேவி ரக்ஷாபந்தன விஸர்ஜனம், தீர்த்த ஸ்நானம் முடித்து மகாபூர்ணாகுதி, யாக கும்பாபிஷேகம், இரவு: துவஜாவரோகணம் (கொடியிறக்கம்), நவசந்தி விஸர்ஜனம், மௌனோற்சவம், மௌனோற்சவம், ரக்ஷாபந்தன விஸர்ஜனம், சண்டேஸ்வரி உற்சவம், ஆசாரிய உற்சவம், குரு வழிபாடு. |

| நாள் | உற்சவம் | பகல் உபயகாரர் | இரவு உபயகாரர் |
|---|---|---|---|
| 20-04-2023 (வியாழன்) | 1ம் திருவிழா | கொடியேற்றம் காலை 10:00 மணி, ராஜ்குமார் குடும்பம், உதயகுமார் குடும்பம், ஹரிச்சந்திரன் குடும்பம், மாலினிதேவி குடும்பம் | சிவாயம் குடும்பம், சுகுணரூபன் குடும்பம் மாணிக்கம் சௌந்திரமேனன் குடும்பம் |
| 21-04-2023 (வெள்ளி) | 2ம் திருவிழா | பிரேம்குமார் இளங்கோ குடும்பம் | தம்பாள்துரை குடும்பம் |
| 22-04-2023 (சனி) | 3ம் திருவிழா | சந்திரலிங்கம், தமிழ்செல்வி குடும்பம் | விஜயகுமாரன் சுவர்ணா குடும்பம் |
| 23-04-2023 (ஞாயிறு) | 4ம் திருவிழா | ஆனந்தகுமார் ஆனந்தவேல் குடும்பம், பிரணவன் பாலகுமார் குடும்பம், கண்ணன் வெங்கடாசலம் குடும்பம் | அருள் சந்திரன் குடும்பம் |
| 24-04-2023 (திங்கள்) | 5ம் திருவிழா | சுவர்ணராஜா சின்னமணியின் குடும்பம் | குணசேகரம் குடும்பம், தனசேகரம் குடும்பம், ஜெயசேகரம் குடும்பம். |
| 25-04-2023 (செவ்வாய்) | 6ம் திருவிழா | மோகனதாஸ் சுதன் சாந்தி குடும்பம் | நாராயணசாமி பணமல் குடும்பம் (மாணிக்கம்பண்ணி) |
| 26-04-2023 (புதன்) | 7ம் திருவிழா | கிராமட்டினம் ராஜசேகரம், கீதாஞ்சலி, தயாநிதன், சிந்துஜா குடும்பம், தம்பையாப்பிள்ளை, பத்மநாதன் குடும்பம் | சிவநேசன் தங்கேஸ்வரி குடும்பம் |
| 27-04-2023 (வியாழன்) | 8ம் திருவிழா | சகாதேவன்(அன்னாசி), சந்திரவதனா குடும்பம் | (வேட்டைத்திருவிழா) மோகனதாஸ் தங்கராணி குடும்பம், செல்வி சுஜாதா குடும்பம், சுது கிரேஸ் குடும்பம் |
| 28-04-2023 (வெள்ளி) | 9ம் திருவிழா | தேவகிராணி தங்கமணி குடும்பம் ( தேவக்கிளி குடும்பம் ) | திலீபன் குடும்பம், தீபன் குடும்பம், ரஜீதன் குடும்பம், ஜனா குடும்பம், ஜெயம் குடும்பம் |
| 29-04-2023 (சனி) | 10ம் திருவிழா | முரளி கௌரி குடும்பம், ஜானகிரம் பவானி குடும்பம் | பாலகுமாரன் மாலச்சந்திரன் குடும்பம் |
| 30-04-2023 (ஞாயிறு) | 11ம் திருவிழா | (பூங்காவனம்) இளைஞர்கள் | (பூங்காவனம் இரவு)இளைஞர்கள் |
| 01-05-2023 (திங்கள்) | 12ம் திருவிழா | இரா தனபாலன் குடும்பம் | மஞ்சம் சுரேஷ் குடும்பம், ஜெயந்தன் குடும்பம் |
| 02-05-2023 (செவ்வாய்) | 13ம் திருவிழா | கண்ணன் சங்கீதா குடும்பம் | சப்பறம் சி. இளையபெருமாள் குடும்பம் |
| 03-05-2023 (புதன்) | 14ம் திருவிழா | தேர் வ.இ.த. சந்திரலிங்கம் சிவகதி குடும்பம் | கந்தசாமி அன்னமலை குடும்பம் |
| 04-05-2023 (வியாழன்) | 15ம் திருவிழா | தீர்த்தம் வாசுகி தீபதரன் குடும்பம் | கொடியிறக்கம் சுகந்தன் கவிதா குடும்பம் |
| 08-05-2023 (திங்கள்) | குளிர்த்தி | குளிர்த்தி அபிசேகம் பொன். சிவகுமார் சந்தானலக்ஸ்மி குடும்பம் | கற்பூரத் திருவிழா அசோக்குமார் கமாஜினி குடும்பம் |
| 12-05-2023 (வெள்ளி) | இரவு | வைரவர் மடை – பிரணவி மகிள்வாணன் குடும்பம் | |

| | | |
|---|---|---|
| அபிசேகம் | பகல் 9:00 மணி | இரவு 6:00 மணி |
| மூலஸ்தான பூசை | பகல் 9:30 மணி | இரவு 6:30 மணி |
| வசந்த மண்டப பூசை | பகல் 11:00 மணி | இரவு 8:00 மணி |

ஆலய பிரதம குரு: ஆகம கிரியா வியூர் சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள்

மங்கள வாத்தியம்: சிவா நாதஸ்வர மியூசிக் அக்கடமி, சிவயம் குழுவினர்

1771 ALbion Road. Unit #1, Toronto, Ontario, M9W 5S7, Canada. 416.213.0110

**04-05-2023 வியாழக்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று காலை 6 மணி முதல் பிதிர் தர்ப்பணம் செய்யப்படும்**

www.shrimuththumaari.com Canada-Shri-Muththumaari-Amman

இங்ஙனம்: ஆலய தர்மகர்த்தா சபையினர்

PREMIER DIAGNOSTIC NETWORK

PDXN

647•660•0699
www.pdxn.ca

Scan for Online Booking

# RADIOLOGY & CARDIOLOGY SERVICES

## எங்களுக்காக நாங்கள்!

**தமிழர்களின் நிர்வாகத்தில் நகரின் மத்தியில் நல்லதோர் மருத்துவ பரிசோதனை நிலையம்!**

ரேடியோலஜி, மற்றும் கார்டியோலஜி பரிசோதனைகளிற்காக நீங்கள் பரிந்துரைக்கப்பட்டால், ஆற்றலும், அனுபவமும் மிக்க நிபுணர்களின் சேவைகளை பெற்றுக்கொள்ள தமிழர்களின் நிர்வாகத்தில் நடாத்தப்படும் எங்களின் சேவைகளை நாடுங்கள்.

**தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்**

**647-494-9909**

- X-RAY
- ULTRASOUND
- BONE DENSITY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- ABPM (24H BLOOD PRESSURE MONITORING)

## PREMIER RADIOLOGY CLINICS

### BELLESMERE X-RAY, ULTRASOUND & BMD

North of Ellesmere & Bellamy

**1920 Ellesmere Road, Suite 311 & 311A**

Scarborough, ON M1H 2V6

Tel: **416-289-2280**

Fax: **416-289-7321**

### BRIMLEY X-RAY, ULTRASOUND & BMD

South of Brimley & Sheppard

**2020 Brimley Road**

Scarborough, ON M1S 4R7

Tel: **416-299-7677**

Fax: **416-299-7948**

Access & Share Your Imaging and Reports Online: **https://pdxn.ca/page/patient-imaging**

## PREMIER CARDIAC CLINICS

Tel: **416-289-3212** • Fax: **416-289-0815**

### BELLESMERE CARDIAC CLINIC

North of Ellesmere & Bellamy

**1920 Ellesmere Road, Suite 307**

Scarborough, ON M1H 2V6

### BRIMLEY CARDIAC CLINIC

South of Brimley & Sheppard

**2020 Brimley Road**

Scarborough, ON M1S 4R7

## ACCREDITATIONS

Cardiac Echo Quality Care and Service by: CorHealth Ontario

Radiology Medical Quality and Standard of Care by: The College of Physicians and Surgeons of Ontario

Affiliated Clinical Site: UHN University Health Network; The Michener Institute of Education at UHN

Accredited Ultrsound Training Program: Accreditation Canada

Infection Control and Cleaning Process by: Public Health Ontario

## FUNDED BY

Ontario Ministry of Health & Long Term Care

# குரங்காட்டி அரசியல்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



குரங்குகளை சீனாவுக்கு விற்கும் விடயம் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் செயலுக்குப் போகவில்லை. ஆனால் குரங்குகள் நாட்டின் தலைப்புச் செய்திகளாகி விட்டன. கடந்த வாரம் இலங்கைத்தீவில் அதிகம் மீம்ஸ்கள் உருவாக்கப்பட்டது குரங்குகளுக்கா?

இலங்கையில் மொத்தம் 30 லட்சம் குரங்குகள் உள்ளதாக கணிப்பிடப்படுகிறது. ஆனால் இக் குரங்குகள் அண்மை ஆண்டுகளில் விவசாயத்துக்கு பெருநாசத்தை விடுவிப்பதாக விவசாயிகள் முறையிடுகின்றார்கள். குறிப்பாக ஆற்றங்கரைகளில் பயிர் செய்பவர்கள் குரங்குகளினால் அதிகம் பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது. இதனால் விவசாயிகளில் ஒரு பகுதியினர் யானை வேலியை அமைத்து வருவதாகவும் ஒருமுறை அந்த வேலியில் முட்டினால் குரங்கு மீண்டும் அந்த பகுதிக்கு வரத் தயங்கும் என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த ஒரு அரசியல் செயற்பாட்டாளர் (அதேசமயம் விவசாயப் பாரம்பரியத்தில் வந்தவர்) சொன்னார், தங்களுடைய ஊரில் முன்பு குரங்குகளின் வாயை கட்டும் நுட்பம் தெரிந்த மாந்திரீகர்கள் இருந்ததாக. அவர்கள் மரங்களில் ஏறி எதையோ செய்வார்களாம். அதன் பின் குரங்குகள் அந்த மரங்களுக்கு வந்தாலும் காய்கறிகளில் வாய் வைப்பது இல்லை என்று அவர் சொன்னார். அது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்க முடியாத ஒரு நம்பிக்கை. ஆனால் காட்டோரமாக விவசாயம் செய்பவர்கள் சில சமயங்களில் குரங்குத் தொல்லை தாங்க முடியாத போது வேட்டைத் துவக்கினால் குரங்குகளைக் கொல்வதும் உண்டு. கொல்லப்பட்ட குரங்கின் உடலை அப்பகுதியில் தொங்க விடுவார்கள். அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு குரங்கின் வருகையை தடுக்கலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

விவசாயிகள் மட்டுமல்ல காட்டுக்கு அருகே இருக்கும் கிராமவாசிகளும் வீடுகளில் பயிர்பச்சை வைக்க முடியாத ஒரு நிலைமை காணப்படுவதாக முறையிடுகிறார்கள். குறிப்பாக வன்னிப் பெருநிலத்திலும் யாழ்ப்பாணம் தென்னராட்சியிலும் இந்த நிலைமை உண்டு. வீட்டில் ஆசையாக ஒரு பயிர் பச்சையை வைத்தால் குரங்கு அதை பிடுங்கிச் சாப்பிட்டு விடுகிறது என்று சொல்லுகிறார்கள். மாங்காய்களை மட்டுமல்ல பயன் தரும் மரங்களின் துளிர்களையெல்லாம் குரங்குகள் சாப்பிட்டு விடுவதாகவும் வன்னியில் முறைப்பாடு உண்டு.

இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை எல்லா அதிர்ச்சிகளின் போதும் தாங்கிப் பிடித்தது விவசாயம் தான். அந்த விவசாயத்துக்கு குரங்கு ஒரு எதிரியாக மாறியிருப்பதாக விவசாயிகள் முறைப்பாடு செய்கிறார்கள். அது தொடர்பாக புள்ளிவிபரங்களும் உண்டு. புள்ளிவிபரங்களால் இக் கட்டுரையை நிரப்பக் கூடாது என்பதனால் அதைத் தவிர்க்கிறேன்.

அரசாங்கம் கடந்த பெப்ரவரி மாதம் குரங்கை ஒரு பீடை என்று அறிவிக்கும் அளவுக்கு குரங்குகள் விவசாயத்துக்கு பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தத் தொடங்கி விட்டன. அண்மையில் அரசாங்கம் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்குகள் பட்டியலில் இருந்து குரங்குகளை நீக்கும் அளவுக்கு குரங்குகள் ஆபத்தானவைகளாக மாறி விட்டன.

எனவே பீடையாக மாறிய குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்து டொலரைச் சம்பாதிக்க அரசாங்கம் முடிவெடுத்ததா?

குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது குறித்து சீனா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை என்றும் சீன தனியார் நிறுவனமொன்றே இதற்கான கோரிக்கையை முன் வைத்துள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



விவசாயத்துறை அமைச்சருக்கு சீனத் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து மிருகக்காட்சிசாலைகளுக்காக குரங்குகளைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த கோரிக்கை தொடர்பில் அவர் வன ஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட விடயத்துடன் தொடர்புடைய ஏனைய தரப்பினரது பங்கு பற்றலுடன் குழுவொன்றை நியமித்து ஆராய்ந்து வருவதாக அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். எந்தவொரு நாட்டுக்கும் விலங்குகளை சாதாரணமாக பரிமாற்றம் செய்ய முடியாது. எம்மை விட மிகக் கடுமையான சட்ட ஏற்பாடுகள் சீனாவில் காணப்படுகின்றன. எனவே சில ஊடகங்களில் காண்பிக்கப் படுவதைப் போன்று அரசாங்கம் விலங்குகளை தான் விரும்பியபடி இறைச்சிக்காக ஏனைய நாடுகளுக்கு வழங்க முடியாது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை பேச்சாளர் குறிப்பிடும் அந்த சீன நிறுவனத்தின் பெயர் ஷி செங் வூ யூ அனிமல் பிரீடிங்'' என்று கூறப்படுகிறது. கடந்த மார்ச் மாதம் பத்தாம் தேதி அந்த நிறுவனத்திடம் இருந்து அப்படி ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. சீனாவில் தனியார் நிறுவனங்கள் என்று அழைக்கத்தக்க சுயாதீனமான நிறுவனங்கள் உண்டா? என்ற கேள்வி இங்கு முக்கியம்

.மேலும் இது தொடர்பில் கடந்த புதன்கிழமை கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் ருவிற்றரில் பிரசுரித்த தகவலின்படி குரங்கு வியாபாரத்தை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. ஆனால், இலங்கைத்தீவின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் தெரிவித்து வரும் தகவல்களை வைத்துப் பார்த்தால் இந்தக் கதை நெருப்பில்லாமல் புகையவில்லை என்று தெரிகிறது.

ஒன்றில் எதிர்ப்பு வந்தபடியால் அரசாங்கம் பின்வாங்குகிறது என்று பொருள். அல்லது அரசாங்கம் ஏதோ ஒரு குரங்கு வித்தை காட்டுகிறதா?

இதுதொடர்பில் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர என்னென்ன சொன்னார்?

இலங்கையிலிருந்து குரங்குகளை வாங்கச் சீனா தயாராகி வருவதாக தகவல் கிடைத்ததையடுத்து, அமெரிக்காவும் குரங்குகளைப் பெற விண்ணப்பித்துள்ளது என்று அவர் சொன்னார். எனினும், அமெரிக்காவிற்குத் தேவையான குரங்குகளின் எண்ணிக்கை இதுவரை அறிவிக்கப்படவில்லை. சீனாவுக்கு 100,000 குரங்குகளை வழங்குவதற்கான வழிமுறைகளை தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றுமவர் சொன்னார். விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதே பொருத்தமானது, விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டாம் என்று எவரும் கூறவில்லை எனவும் அவர் சொன்னார்.

இலங்கையில் உள்ள குரங்கு ஒன்றை பிடிப்பதற்கு மட்டும் சுமார்,5 ஆயிரம் ரூபாய் வரை செலவிட சீன நிறுவனம் தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் சொல்லியிருந்தார். குரங்கொன்றிற்காக சுமார் 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபாய் வரையில் சீன நிறுவனம் செலவிட வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அதேவேளை, குரங்குகளை சீனாவுக்கு கொண்டு சென்று இறைச்சிக்காக பயன்படுத்த போவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்றும் அவர் சொல்லியிருந்தார்.

சீனா குரங்குகளை மிருகக்காட்சி சாலைகளில் பாதுகாப்பதற்கென்றே கேட்டுள்ளதாகவும் சொன்ன அமைச்சர், குரங்குகளைப் பிடித்து தனிமைப்படுத்தி, அவற்றுக்கு நோய்த்தொற்று உண்டா என்பதனை பரிசோதித்து, கூடுகளில் அடைத்து, சீனாவிற்கு கொண்டு செல்வதற்கான முழுச் செலவையும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இருந்து குரங்குகளை 50 ஆயிரம் ரூபா செலவளித்து சீனாவிற்கு கொண்டு சென்று, அந்த குரங்கை இறைச்சிக்காக பயன்படுத்துவதாயின் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் லாபம் வைத்து ஒரு லட்சம் ரூபாய்க்கே விற்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கூறிய அமைச்சர், ஒரு லட்சம் ரூபாய் கொடுத்து குரங்கை வாங்கிச் சமைப்பதற்கு சீனர்கள் தயாராக இருக்க மாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும் இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகள் சீனாவின் ஆய்வு கூடங்களுக்கு அனுப்பப்படலாம் என்று இலங்கை சுற்றாடல் நீதி அமைப்பின் தலைவர் ஹேமந்த விதானகே கூறுகிறார். இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகளை அழகுசாதனப் பொருட்களைச் சோதனை செய்வதற்கும் மருத்துவப் பரிசோதனைகளிற்கும் சீனா பயன்படுத்தலாம் என்றும் அவர் கூறுகிறார். மிருகக்காட்சி சாலைகளிற்கான சர்வதேச வரைவிலக்கணங்களின்படி, சீனாவில் 18 மிருகக்காட்சி சாலைகளே உள்ளன. ஒரு மிருகக்காட்சி சாலைக்கு 5,000 குரங்குகள் என்று கணக்கிட்டாலும் சீனா தெரிவிப்பது நம்பக்கூடிய விடயமாக இல்லை என்றும், இலங்கை அரசாங்கம் ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவிற்கு அனுப்பினாலும் இலங்கையில் குரங்குகளின் எண்ணிக்கை குறையப் போவதில்லை என்றும் அவர் கூறுகிறார்.

குரங்குகளால் பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டு வரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால், கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக,பின் நோக்கிச் சுடுவது போன்று பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். குரங்குகள் தமது உணவு முறையால் காட்டுவெளியெங்கும் விதைகளைத் தூவி மரங்களை இயற்கையாகவே நடவு செய்கின்றன. இதனால், காடுகளின் கட்டுமானத்தில் மையக் கல் இனங்களாகக் (key stone species) கருதப்படும் இக்குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி இயற்கைச் சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற்றங்கள் விரைவுபடுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும்.

செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது. சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இந்நிலையில் எதனையுமே விற்று டொலர்களாக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் நடைமுறைச் சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். கூடவே, குரங்குகளினால் விவசாயத்துறைக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையொன்றையும் விரைந்து நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்''...என்று தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் கூறுகிறார்.

ஏற்றுமதி செய்யப்படும் குரங்குகள் சீனாவில் மிருகக்காட்சி சாலைகளில் பேணப்படுமென்று கூறப்பட்டாலும், சீனாவில் குரங்கு இறைச்சி சாப்பிடும் பாரம்பரியம் இருப்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. குறிப்பாக குரங்கின் மூளையிலிருந்து தயாரிக்கப்படும் உணவு சீனாவில் அதிகம் விலை கூடியதாகவும் பெரும் செல்வந்தர்களால் மட்டும் நுகரப்படக் கூடிய ஒன்றாகவும் காணப்படுகிறது. இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் குரங்குகள் சீனாவின் விலங்குகள் காப்பகத்துக்கு எடுத்துச் செல்லப்படுமா அல்லது சமையலறைக்கு எடுத்துச் செல்லப்படுமா என்ற சந்தேகத்தை ஒரு பகுதியினர் கிளப்புகிறார்கள்.(22ம் பக்கம் பார்க்க)

# Bolton Honda

65 Pillsworth Road, Bolton, ON, L7E 4E9

**Lease from 4.08% on select 2023 models**

## LEASE TO OWN

$93



weekly - Plus TAX

$0 down @ 6.58%

CANADIAN BUILT

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

**2023 CIVIC LX Model**

## LEASE TO OWN

$120



weekly - Plus TAX

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr - 7.59%

**2023 CR-V**

## USED VEHICLES

Over 100 USED Vehicles

HONDA | TOYOTA

LEXUS | ACURA

BMW | AUDI

**CIVIC**
20 in stock

**CR-V**
15 in stock

**ACCORD**
10 in stock

**ODYSSEY**
10 in stock

**2023 CR-V HYBRID Available**

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்



tonymidtown@hotmail.com

**Tony Siva** 647.269.0749

Sales & Leasing Executive

# எங்களுடைய எதிரி எங்களுடைய ஆசிரியர் அல்ல

1980களில் முதலாம் கட்ட ஈழப் போரின்போது இயக்கங்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் அதிகம் பார்க்கப்பட்ட ஒரு படம் உமர் முக்தாரின் போராட்ட வாழ்க்கை பற்றிய ஒரு திரைப்படமாகும். இப்படத்தில் ஓரிடத்தில் உமர் முக்தாரிடம் அவருடைய போராளிகள் வந்து கேட்பார்கள் கைது செய்யப்பட்ட எதிரிப் படைகளை நாங்கள் சித்திரவதை செய்து கொல்வோமா? என்று.

உமர் முக்தார் ஏன் அப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்பார்.

அவர்கள் எங்களுடைய போராளிகளை கைது செய்யும் பொழுதும் அப்படித்தான் கொன்றார்கள். எனவே நாங்களும் அவர்களுக்கு அவர்களுடைய பாணியிலேயே பதில் கொடுக்க வேண்டும் என்று போராளிகள் கூறுவார்கள்.

அப்பொழுது

உமர் முக்தார் மிக நிதானமாக ஒரு பதில் சொல்வார் எங்களுடைய எதிரி எங்களுடைய ஆசிரியர் அல்ல என்று.

இது ஒரு முக்கியமான பதில். போராடும் இனங்கள், போராட்டத்திற்காகவே ஒரு தலைமுறையை இழந்த இனங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு பாடம். எங்களுடைய எதிரி எங்களுடைய ஆசிரியர் அல்ல.

அண்மை மாதங்களாக ஏன் அண்மை ஆண்டுகளாக என்று கூடச் செல்லலாம், வடக்கில் நடப்பவற்றை பார்க்கும் போது உமர் முக்தாரின் மேற்படி வாசகம் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வருகிறது.

கடந்த கிழமை மட்டும் யாழ்ப்பாணத்தில் இரண்டு சிலைகள் திறக்கப்பட்டன. ஒன்று பண்ணை வாசலில் நயினாதீவு நாகம்மாளுக்கு ஒரு சிலை. கீரிமலையில் ஆறுமுக நாவலருக்கு ஒரு சிலை. இதற்கு முந்தைய வாரங்களிலும் அவ்வாறு பல சிலைகள் திறக்கப்பட்டன. அவற்றுள் திருவள்ளுவர் உட்பட சமயப் பெரியார்கள் மற்றும் மன்னர்கள் கடவுளர்களின் சிலைகள் அடங்கும்.

சிலைகளை எழுப்புவது எல்லா சமூகங்களிலும் உண்டு. சிலைகள் தேவை. சமூக உருவாக்கிகளையும் பேராளுமைகளையும் பொதுவெளியில் சிலைகளாக நிறுத்துவது ஒரு நல்ல முன்னுதாரணம். அது அடுத்தடுத்த தலைமுறைக்கு எப்படி. ஒரு வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற முன்னுதாரணத்தைக் கொடுக்கும். ஒரு வெளிப் பார்வையாளருக்கு அந்த சமூகத்தின் முன்னோடிகள் யார் என்பதை அறிந்து கொள்ள அது உதவும். அதைவிட முக்கியமாக ஒரு சமூகம் அதன் பொது வெளியில் எப்படிப்பட்ட சிற்பங்களை சிலைகளை நிறுவுகிறது? அவற்றின் கலைப் பெறுமதி எத்தகையது? போன்ற அனைத்தும் ஒரு வெளிப் பார்வையாளருக்கு அந்த சமூகத்தை மதிப்பிட உதவும்.

அந்த சமூகத்தின் விழுமியங்கள், அந்த சமூகத்தின் கலை உச்சங்கள், கலைப் பாரம் பரியம் போன்ற எல்லாவற்றையும் அறிந்து கொள்ள அது உதவும். இந்த அடிப்படையில் கூறின் சிலைகள் தேவை. ஆனால் நாட்டில் தற்பொழுது நிறுவப்படும் பெரும்பாலான சிலைகள் மேற்சொன்ன வகைக்குள் மட்டும் வருபவை அல்ல. சில சமயப் பெரியார்கள் சமூகப் பெரியார்களின் சிலைகளைத் தவிர, ஒரு பகுதி கடவுள் சிலைகள் மேற்கண்ட நோக்கத்தின் அடிப்படையில் நிறுவப்படவில்லை. அவை கடந்த பல மாதங்களாக தமிழ் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் போட்டிக்குச் சிலை எழுப்பும் ஒரு போக்கின் விளைவுகளே.

சிலைகளை அரசியல் உள்நோக்கத்தோடு முதலில் நிறுவியது சிங்கள பௌத்த அரசியல் தான். முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீம் கூறியது போல, புத்தர் சிலைகளை எல்லைக் கற்களாக வைத்தது சிங்கள பௌத்த அரசியல் தான்.

அதுபோலவே மன்னாரில் கத்தோலிக்கர்கள் தங்களுடைய முதன்மையை நிலை. நாட்டுவதற்கு ஆங்காங்கே சிலைகளை வைப்பதுண்டு என்று மன்னாரில் உள்ள இந்துக்கள் குற்றம் சாட்டுவதுண்டு. ஒரு கடவுள் சுருவத்தை யார் வைத்தது என்று தெரியா



மல் இரவோடு இரவாக அனாமதேயமாக முதலில் வைத்து விட்டால், அதைப் பின்னர் அகற்றுவது கடினம். ஏனென்றால் அது மக்களுடைய நம்பிக்கைகளோடு தொடர்புடையது. வைத்த சிலையை அகற்றுவது சமயங்களுக்கு இடையே, சமூகங்களுக்கு இடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும். அதை அனாமதேயமாக அகற்றலாம். அல்லது உடைக்கலாம். அதுவும் முரண்பாடுகளை ஏற்படுத்தும். எனவே ஒரு சிலையை வைத்தால் வைத்தது தான். படிப்படியாக அதற்கு ஒரு பீடம் வைக்கப்படும். பின் கூரை வைக்கப்படும். அதன் பின் சில சமயம் பூஜைகளும் நடத்தப்படும். இத்தனைக்கும் அவை பொதுவெளிச் சிலைகள். கற்பகக் கிரகங்களுக்குள் இருக்கும் மூலவிக்கிரகங்கள் அல்ல.

இந்துமத நம்பிக்கைகளின்படி அவை ஆவாகனப்படுத்தப்பட்ட சிலைகள் அல்ல. அவை பொதுவெளிச் சிற்பங்கள். அவை வழிபாட்டுக்குரியவை அல்ல. ஆனால் நாட்டில் வழிபாட்டுருக்களுக்கும் பொதுவெளிச் சிற்பங்களுக்கும் இடையே வேறுபாடு தெரியாத ஒரு நிலைமை வளர்ந்து வருகிறது.

சிங்கள பௌத்த அரசியல்தான் முதலில் சிலைகளை வைக்கத் தொடங்கியது. அங்கே மதப் பல்வகைமைக்கு எதிரான மத மேலாண்மை என்ற உள்நோக்கம் இருந்தது. சிங்கள பௌத்தர்கள் இல்லாத இடங்களில் வைக்கப்பட்ட எல்லாச் சிலைகளுமே மத மேலாண்மையின் குறியீடுகள் தான். தமிழ்ப் பகுதிகளை பிடித்து வைத்திருக்கும் படையினர் தமது வழிபாட்டுத் தேவைகளுக்காக உருவாக்கும் சிலைகளும் அத்தகையவை தான். அவை ஆக்கிரமிப்புச் சின்னங்களாகத் தான் தமிழ்மக்களால் பார்க்கப்படுகின்றன.

இவ்வாறு புத்தர் சிலைகளை ஆக்கிரமிப்பின் குறியீடுகளாக மாற்றியது சிங்கள பௌத்த அரசியல் தான். அதற்கு மறுப்பாக இப்பொழுது இந்துக்களும் சிலைகளை வைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் வேகமாக வளர்ந்து வரும் ஒரு போக்கு இது. முதலில் ஒரு சிவலிங்கம் யார் வைத்தது என்று தெரியாமல் அனாமதேயமாக இரவோடு இரவாக வைக்கப்படும். பின்னர் அதனை அலங்கரிக்கும் வேலைகளும் பாதுகாக்கும் வேலைகளும் படிப்படியாகச் செய்யப்படும். அப்படி ஒரு பெரிய சிவலிங்கம் சில ஆண்டுகளுக்கு முன்பு.செம்மணிச் சந்தியில் வைக்கப்பட்டது. கண்டிவீதியில் யாழ்ப்பாணம் வரவேற்கின்றது என்று காணப்படும் வளைவுக்கு அருகே அது வைக்கப்பட்டது. தற்காலிகமாக மணகுவியல் ஒன்றை ஏற்படுத்தி அதன் மீது அது வைக்கப்பட்டது. வைக்கப்பட்ட புதிதில் அது நேராக நீர்மட்டம் பார்த்து வைக்கப்படவில்லை. எனவே அந்தச் சிவலிங்கம் ஒரு பக்கம் சாய்ந்து நின்றது. ஆனால் இப்பொழுது அதற்கு ஒரு கட்டிடம் கிடைத்து விட்டது. அதை இனி அங்கிருந்து அகற்ற முடியாது. அதை அகற்றினால் அது யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துக்களின் மனங்களை காயப்படுத்தக்கூடும்.

சில வாரங்களுக்கு முன் வடமராட்சி கிழக்கிலும் அவ்வாறு ஒரு சிவலிங்கம் வைக்கப்பட்டது. அதற்கும் இனிமேல் உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று நம்பலாம். சில நாட்களுக்கு முன் பண்ணையில் நயினாதீவு அம்மனின் சிலை வைக்கப்பட்டது. இந்தச் சிலைகளை வைப்பது உருத்திர சேனை என்று நம்பப்படுகிறது. சிவசேனையைப் போல உருத்திரசேனையும் அண்மை மாதங்களாகத் துடிப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஒருபுறம் சிலை வைப்பது இன்னொருபுறம் மதம் மாற்றும் ஆவிக்குரிய சபைகளுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுப்பது.

ஒரு மதப் பிரிவினர் அதிகம் வாழும் இடங்களில் பொதுவெளியில் அவ்வாறு சிலைகளை நிறுவுவது என்பது நம்பிக்கைகள் சார்ந்த ஒரு விடயம். ஆனால் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல சிங்கள பௌத்த அரசியலுக்கு எதிரான ஒரு மறுத்தானாக அதை வியாக்கியானப் படுத்தும் போது தான் சில கேள்விகள் எழுகின்றன.

ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒரு மக்கள் கூட்டம் தற்காப்பாக சிலைகளை நிறுவுவதற்கு ஒரு நியாயம் உண்டு. மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக தமது மரபுரிமைச் சின்னங்களை முன்னிறுத்த ஒருமக்கள் கூட்டத்திற்கு உரிமை உண்டு. ஆனால் அவ்வாறு சிலைகளை நிறுவும் பொழுது பின் வரும் விடயங்கள் கவனத்தில் எடுக்கப் பட வேண்டும்.

முதலாவதாக, அனாமதேயமாக சிலைகளை வைப்பது என்பது சிங்கள பௌத்தர்கள் கடைப்பிடிக்கும் ஒரு நடைமுறை. நிச்சயமாக அவை தான் தோன்றி லிங்கங்கள் அல்ல. உண்மையான தான்தோன்றிச் சுருவங்களுக்கு மக்கள் மத்தியில் ஒரு புனிதப்பெறுமதி உண்டு. உமர் முக்தார் கூறியதுபோல சிங்கள பௌத்தத்தின் ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி திட்டத்தை அப்படியே சைவர்களும் கடைப்பிடிக்க தேவையில்லை.

இரண்டாவதாக, வைக்கப்படும் சிலைகள் தொடக்கத்தில் யாராலும் கவனிக்கப்படாது அனாதைகளாகக் காணப் படும்.

அக்கால கட்டத்தில் அவற்றை பறவைகள் எச்சமிட்டு அசிங்கப் படுத்தும். அந்த சிலையை அல்லது சிவலிங்கத்தை அப்பகுதி மக்கள் பொறுப்பேற்கும்வரை அவை கவனிப் பாரற்றுக் கிடக்கும். இது குறிப் பிட்ட சிலையை வைத்தவர்களின் மத நம்பிக்கைகளை கேள்விக்கு உள்ளாக்கக்கூடியது. தனது இஷ்ட தேவதையின் சிற்பத்தை இவ்வாறு அனாதையாக விட்டுச் செல்லும் எவரும் அந்த இஷ்ட தேவதையை அவமதிக்கிறார்கள் என்று தானே பொருள்? இது இரண்டாவது விடயம்.

மூன்றாவது விடயம், அச்சிலைகளின் கலையம்சம் தொடர்பானது. இது குறித்து நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். இந்த விடயத்தில் துறை சார்ந்த நிபுணர்களான சிற்பிகளை அணுகி சிலைகளை வடிவமைக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி சிலைகளை வைப்பவர்களிடம் உண்டா? என்ற கேள்வி இங்கு முக்கியமானது.

நாலாவது விடயம், சிலைகளை வைக்க வேண்டும். அதை விட முக்கியமாக ஒரு மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக அல்லது மத மேலாண்மைக்கு எதிராக தன்னுடைய நம்பிக்கைகளை முன்னிறுத்தும் ஒரு சமூகம் எப்படிப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகளை முதலில் செய்ய வேண்டும்?

மரபுரிமை சொத்துக்களை பேணுவது என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டுரிமையாகும். அதாவது அரசியல் உரிமை. தமிழ் மக்களுக்கு அந்த உரிமை கிடையாது. ஆனாலும் தமது மரபுரிமைகளை பாதுகாப்பதற்குரிய தற்காப்பு நடவடிக்கைகளை தமிழ் மக்கள் அதற்குரிய அரசியல் மற்றும் அழகியல் அர்த்தத்தில் திட்டமிட வேண்டும். அதில் இருக்க வேண்டிய அழகியல், நவீனத்துவம் போன்றவற்றில் கவனம் செலுத்தவேண்டும்.

இது

தொடர்பாக உலகளாவிய அனுபவங்களை கற்றுக் கொள்ள வேண்டும். ஓர் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக எப்படிப்பட்ட தற்காப்புக் கவசங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பது சில மத நிறுவனங்கள் மட்டும் தீர்மானிக்கும் விடயம் அல்ல. அது ஒரு அரசியல் சமூக பொருளாதார கலாச்சார நடவடிக்கை. அது ஒரு கூட்டு நடவடிக்கை. அதைக் கூட்டாகத் திட்டமிட வேண்டும். உலகத் தரத்துக்குத் திட்டமிட வேண்டும். நவீனமாகத் திட்டமிட வேண்டும். ஒரு ஆக்கிரமிப்பு அரசியலுக்கு எதிராக அந்த ஆக்கிரமிப்பு அரசியலின் பாணியிலேயே பதில் சொல்வது வேண்டுமானால் போர்விதிகளுக்குப் பொருத்தமாக இருக்கலாம். நிச்சயமாக மரபுரிமைக் களத்துக்கு அது பொருத்தம் இல்லை.

இந்த உலகில் போலியான மத நம்பிக்கைகள் எந்தளவுக்கு எல்லை கடந்து போய்க் கொண்டிருக்கின்றன என்பதற்கு கென்யாவில் இடம் பெற்ற சம்பவம் ஒரு சான்றாக உள்ளது.

கென்யாவின் மாலிண்டி எனும் இடத்தில் இயேசுநாதரை பின்பற்றும் ஒரு மதப் பிரிவைச் சேர்ந்த 47 பேர், உணவில்லாமல் பட்டினி கிடந்தால் இயேசுவை தரிசிக்கலாம் என்ற போதகரின் போதனையை ஏற்று உணவில்லாமல் இருந்து மரணத்தை தழுவியுள்ளனர்.

பட்டினி கிடந்தால் பரலோகம் போகலாம் என குறித்த கிறிஸ்தவ பிரிவின் மதகுரு கூறியதை நம்பி இவர்கள் அனைவரும் உயிரிழந்துள்ளதுடன் அனைவருமே ஆழமற்ற புதைகுழிகளில் புதைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்கள் தற்போது மீட்கப்பட்டு வருகின்றன. கடந்த ஒரு வார காலமாக இவ்வாறு சடலங்கள் மீட்கப்பட்டு வருகின்றமை முக்கிய விடயம்.

கென்யாவின் கடலோர பிரதேசமான மாலிண்டி பகுதியில் இவ்வாறு பட்டினி கிடந்து இறந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலரும் அடங்குகின்றனர் என அப்பகுதியிலிருந்து வரும் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

சர்வதேச நற்செய்தி ஆலயம் இந்த மத அமைப்பின் தலைவரின் போதகரின் பெயர் போல் மெக்கன்சி என்தெங்கே என்பதாகும். தற்போது அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

சர்வதேச நற்செய்தி என தனது அமைப்புக்கு பெயர் வைத்த அவர், இவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும் அங்கு கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பட்டினியால் இறந்த நான்கு பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதே, தகவலறிந்து மாலிண்டி பொலிஸார் போதகரை கடந்த 15ஆம் திகதி கைது செய்துள்ளனர். அதனையடுத்து அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளுக்கு அமைய, இவ்வாறு பல பேர் பட்டினி கிடந்து இறந்து புதைக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

24 ஏப்ரல் 2023 திங்கட்கிழமை 26 சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என மாலிண்டி குற்றவியல் விசாரணைகள் தலைவர் சார்ள்ஸ் கமாவ் தெரிவித்துள்ளார்.

இதில் சோகமான விடயம் என்னவென்றால், வழிபாடுகளிலிருந்து தப்பிச் சென்ற பலரும் போதகரின் மூளைச் சலவையால் பல நாட்கள் உணவு உட்கொள்ளாமல் பிடிவாதமாக பட்டினி கிடப்பதாக கூறப்படுகிறது.

கிழக்கு கென்யா பிரதேசமான மாலிண்டிக்கு அருகிலுள்ள ஷகாஹோலாவில் உள்ள 325 ஹெக்டேர் (800 ஏக்கர்) காடுகளில் இருந்து உடல்களை தோண்டி எடுக்கும் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த செய்தியால் கென்யாவில் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றும் பலரும் பதற்றமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்களின் ஊடாக அறியக் கூடியதாக உள்ளது.

கென்யாவின் உள்துறை அமைச்சர் கெதுரே கிண்டிகி என்பவர் இது ஒரு வனப் படுகொலை என்கிறார். குறித்த மத அமைப்பின் போதகருடன், கைது செய்யப்பட்ட அமைப்பின் தலைவர் போல் மெக்கன்சி தான் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். உயிருடன் மீட்கப்பட்ட சீடர்களில் 15 பேரை வைத்திய சாலைக்கு கொண்டு செல்கையில், அவர்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் தெரிவிக்கின்றனர். தாம் மீட்கப்பட்டால், தம்மை பொலிஸார் உணவு உண்ண வைத்துவிடுவார்கள் என அவர்கள் அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது பொலிஸாருக்கு இன்னும் சிக்கல் நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது.

பல நாட்கள் இவ்வாறு உணவின்றி, காடுகளில் மறைந்துள்ளவர்கள் இறந்து போவதற்கும் அதிக வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.



இந்நிலையில் உயிருடன் மீட்கப்பட்டவர்களை பழைய நிலைமைக்கு கொண்டு வருவது சவாலான விடயமாக உள்ளது. அவர்களில் சிலர் சில நாட்களுக்கு முன்பாக போதனையில் ஈடுபட்டவர்களாக தெரிகின்றனர்.

இவர்கள் தமது கொள்கையில் மிகவும் தீவிரமாக உள்ளனர். சாப்பிட மறுக்கின்றனர். இவர்களை பழைய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு, இவர்களை ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களை நாம் அதிகமாக தேடி வருகிறோம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அந்நாட்டு கென்யா உள்துறை அமைச்சர் கிண்டிகி இது குறித்து கூறுகையில், சடலங்களாக தோண்டி எடுக்கப்பட்டவர்களில் குழந்தைகளும் அடங்குகின்றனர். மிகவும் துயரமான சம்பவம் என்னவெனில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் புதைக்கப்பட்டிருக்கின்றனர். மேலும், தம்பதியினர் ஜோடிகளாக புதைக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளின் உடல்களை பார்க்கும் போது துயரம் பீறிடுகிறது என தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு குழந்தைகளின் மரணம் தொடர்பாக மத வழிபாட்டு அமைப்பின் தலைவர் மெக்கன்சி 2019ஆம் ஆண்டு பல சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது முக்கிய விடயம். ஆனால், பல தடவைகளும் அவர் பிணையில் வெளியே வந்து விட்டார். அவருக்கு எதிராக இரண்டு வழக்குகள் இப்போதும் நீதிமன்றில் உள்ளன. கடந்த மாதம், இரண்டு ஆண் குழந்தைகளின் பெற்றோரை பட்டினியால் வாடச் செய்து, அவர்கள் மூச்சுத் திணறி மரணித்தமைக்கும் இவரே காரணகர்த்தா என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் மெக்கன்சியை பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர் மீது வழக்கும் தொடரப்பட்டது.

அந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜரான போது, இரண்டு சிறுவர்களின் மரணங்களுக்கு வழி வகுத்த விடயம் பற்றி தனக்குத் தெரியாது என்றும், தனது முன்னாள் சகாக்கள் சிலர் தன்னிடமிருந்து பிரிந்து சென்று, தனக்கு எதிரான மத அமைப்புகளை உருவாக்கி, தனக்கு எதிராக பிரச்சாரம் செய்து வருவதாகவும் மெக்கன்சி கூறியுள்ளார்.

ஆனால், இம்முறை கைதுசெய்யப்பட்ட போதகர் மெக்கன்சியை எக்காரணம் கொண்டும் பிணையில் விடுதலை செய்யக்கூடாது என உள்ளூர் அரசியல் வாதிகளும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

கென்யாவின் அரசியலமைப்பின்படி, மத சுதந்திரம் இருந்தாலும், மத ரீதியான துஷ்பிரயோக சம்பவங்கள் கடந்த காலங்களில் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

800ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்திருக்கும் மாலிண்டி பிரதேச ஷாகஹோலா காடு முழுவதும் சீல் வைக்கப்பட்டு, குற்றம் நடந்த இடமாக அறிவிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ள அமைச்சர் கிண்டிகி,

பல அப்பாவி ஆன்மாக்கள் மீதான அட்டூழியத்தை நிகழ்த்திய குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படுவது மட்டுமல்லாமல், ஒவ்வொரு தேவாலயம், மசூதி அல்லது ஜெபக் கூடங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்றார்.

# இறைவனைக் காண பட்டினி கிடந்து உயிரிழந்த 47 கென்யர்கள்

இப்போது மதத்தின் பெயரால் முன்னெடுத்த காரியத்துக்கு உலகெங்கும் துக்ககரமான செய்தி பரவ காரணமாகி விட்டார்.

இந்நிலையில் குறித்த இடத்தில் ஒரு பாரிய சிலுவை ஊன்றப்பட்டிருந்ததாகவும் ஆழமற்ற புதைகுழிகளில் பலரும் புதைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும் தான் குற்றமற்றவர் என போதகர் என்தெங்கே கூறி வருகிறார்.



பட்டினி கிடந்தால் இயேசுவை காணலாம் என அவர் தனது சீடர்களுக்கு தொடர்ச்சியாக போதனை செய்து வந்திருக்கிறார். ஆனால், அவர் நல்ல உணவுகளை உண்டு, சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேவாலயத்தில் மீட்கப்பட்ட இந்த அமைப்பின் உறுப்பினர் சாப்பிட மறுத்து தொடர்ந்தும் பட்டினி கிடந்து வருகிறார்.

அமைப்பின் உறுப்பினர்கள் பலர் சடலங்கள் தோண்டப்பட்ட இடத்தின் வனாந்தர பிரதேசங்களில் மறைந்துள்ளதாகவும்

## சனத்தொகையில் சீனாவை...

((20ம் பக்கத் தொடர்ச்சி) மறுப்பதற்கில்லை. அதற்காக நாம் சீனாவைப் பாராட்ட வேண்டியதுதான். வளர்ச்சியடைந்த மேற்குலகை விட முன்னணியில் இருக்கும் அந்தப் போக்கு நமக்கும் பாடமாகும். அத்துடன், விரைவில், அவர்களது சிரிப்பில் உயிர்ப்பும் கலந்தொலிக்க நாம் வாழ்த்துவோம். மீண்டும் சந்திப்போம்.

நன்றி

CCN

## வரலாற்றை திரும்பிப் பார்த்தல்

# தமிழர் விடுதலை கூட்டணியும் தலைவர் அமிர்தலிங்கமும் இந்திய இலங்கை ஒப்பந்தமும்!



பகீரதன் அமிர்தலிங்கம்

**1987இல்** யூலை 29ம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும், ஜே.. ஆர் ஜெயவர்த்தனவுக்கும் ராஜீவ் காந்திக்குமிடையில் கையெழுத்தான இந்திய இலங்கை ஒப்பந்தம் ஆரம்பத்தில் அன்று களத்திலிருந்த அனைத்து தமிழ் அமைப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருந்தது. விடுதலை புலிகளின் தலைவர் திரு பிரபாகரனை இலங்கையிலிருந்து விசேட விமானத்தில் அழைத்து வந்து அவர் புது டெல்லிக்கு பயணிக்கும் முன்னர் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கொடுத்த பேட்டியில் இதற்கு ஆதரவு வழங்குவதாகவே குறிப்பிட்டார். பின்னர் புதுடெல்லி சென்றபோது ஏனைய இயக்கங்களையும் அழைத்து அவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை அறிந்த போது விடுதலை புலிகள் சிறிது பின்னடித்தாலும் இந்திய அரசின் அழுத்தத்தால் அதனை ஏற்றுக் கொண்டனர். தமிழர் விடுதலை கூட்டணி உட்பட ஏனைய இயக்கங்களும் சில தயக்கங்களும் வேற்றுமைகளும் இருந்தாலும் கூட அந்த ஒப்பந்தத்தை ஏற்று இந்திய அரசாங்கத்துடன் வேலை செய்து அந்த ஒப்பந்தம் மூலம் கிடைக்கும் உரிமைகளை மேலும் பலமாக்க உறுதி கொண்டிருந்தன. ஏற்றுக் கொண்டிருந்தன.

இந்தியாவை பொறுத்த வரை இலங்கை தமிழர் பிரச்னைக்கு இதை ஒரு ஆரம்ப தீர்வாகவே கருதினார்கள். ஆனால் அதே நேரத்தில் இதை விரைவில் முடிவுக்கு கொண்டுவரவும் விரும்பினார்கள்.

அதைவிட இந்த ஒப்பந்தத்தை தமிழர்கள் தரப்புக்கள் ஏற்றுக்கொண்டலென்ன இல்லாவிட்டால் என்ன இந்த ஒப்பந்தத்தை முன்னெடுத்து செல்வதிலேயே இந்திய அரசாங்கம் பூரண கவனம் செலுத்தியது. மறைமுகமாக எல்லா ஆயுத இயக்கங்களுக்கும் இதை ஏற்றுக் கொள்ளாவிடில் இந்திய மண்ணில் அவர்கள் வருங்காலத்தில் தங்கியிருப்பதுவோ, செயல்படுவதுவோ சிரமமானது எனவும் கூறப்பட்டது.

திரு அமிர்தலிங்கத்தின் தலைமையிலான தமிழர் விடுதலை கூட்டணியை பொறுத்த வரை இது முடிந்த முடிவாக இல்லாவிட்டாலும்கூட இதை ஏற்றுக்கொண்டு



இந்திய அரசாங்கத்துடன் சேர்ந்து முழுமையாக செயல்படவே முற்பட்டது. இந்த ஒப்பந்தம் உருவானதை தொடர்ந்து நடந்த கடற்படை அணிவகுப்பில் தாக்கப்பட்ட இந்திய பிரதமருடன் உடனடியாக திரு அமிர்தலிங்கம் தொடர்பு கொண்டு அவரது உடல்நலத்தை அறிந்ததுடன் தங்கள் விசனத்தையும் பதிவு செய்தார். அத்துடன் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் நேரடியாக சென்னை வந்த ராஜீவ் காந்தி அவர்கள் சென்னையில் மரீனா கடற்கரையில் அன்றைய தமிழக முதலமைச்சர் திரு எம்ஜி. இராமச்சந்திரனுடன் சேர்ந்து பங்கு பற்றி பேசிய கூட்டத்தில் திரு அமிர்தலிங்கம் அவர்கள் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் இந்தியப் பிரதமருக்கு மாலை அணிவித்து தமது பூரண ஆதரவை தெரியப்படுத்தியிருந்தார். மிதவாத தலைமையானது ஒரு விடயத்தை நன்கு புரிந்து கொண்டிருந்தனர். 1983 - 84 அன்னை இந்திரா உயிருடன் இருந்த வேளையில் இருந்த புது டெல்லியில், இந்திய அரசாங்கத்திற்கு ஈழத்தமிழர் நலனில் இருந்த அக்கறைக்கும் 1986 - 87 காலப்பகுதியில் ராஜீவ் காந்தி காலத்தில்



இருந்த அக்கறைக்கும் இடையில் இருந்த வித்தியாசமே அதுவாகும். அன்னை இந்திராவின் காலத்தில் இந்த பேச்சுவார்த்தைகளின் பிரதான செயல்பாட்டாளராக கடமையாற்றிய திரு ஜீ. பாரத்தசாரதி அவர்கள் ஓரங்கட்டப்பட்டு, வட இந்திய ஆலோசகர்கள் அந்த இடத்துக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். திரு எம்.ஜி. இராமச்சந்திரனும், பண்ருட்டி இராமச்சந்திரனும், மத்திய அமைச்சர் திரு ப. சிதம்பரமும் இதில் முக்கிய பங்கு வகித்தாலும்கூட அவர்கள் எல்லோரும் அரசியல்வாதிகளே. ஒரு பக்கம் திம்பு பேச்சுவார்த்தை காலத்தில் எமது பிரச்சனையை கையாள நியமிக்கப்பட்ட மத்திய அரசு அதிகாரி திரு ரொமேஷ் பண்டாரி அவர்கள் கூறியிருந்தார் "இந்த பிரச்னையை ஓர் அண்டை நாட்டு பிரச்னையாக பார்க்க வேண்டுமே தவிர தமிழர் பிரச்னை என்பதற்கு அப்பால் பார்க்க வேண்டும்" என. இதைப்பற்றி பின்னர் தான் எழுதிய புத்தகத்தில் திரு டிக்சித் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். எந்த தீவிரவாத இயக்கமோ மிதவாத இயக்கமோ இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தாலும் கூட இந்திய அரசை பொறுத்தவரை தமிழீழ விடுதலை புலிகளை தம்முடன் இந்த விடயத்தில் சேர்த்து பயணிக்க வேண்டியதன் முக்கியத்தை உணர்ந்திருந்தது. அதனால்தான் அமைக்கப்படவிருந்த இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் இடைக்கால நிர்வாகத்தின் பெரும்பான்மை பிரதிநித்துவத்தை புலிகளிடமே கொடுக்க தீர்மானித்தனர். பதினொரு பிரதிநிதிகள் கொண்ட இடைக்கால நிர்வாகத்தில் ஏழு இடங்களை விடுதலை புலிகளுக்கும் மற்றைய இயக்கங்களான தமிழர் விடுதலை கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் மற்றும் ஈழபுரட்சி கர மாணவர் இயக்கம் போன்றவற்றிற்கு ஒவ்வொரு இடத்தையும் அளித்திருந்தனர். இந்த விடயத்தை யிட்டு சென்னையில் அன்றைய கூட்டத்தில் நடந்த தமிழர் விடுதலை கூட்டணியின் பொலிற் பியுரோ கூட்டத்தில் மிகவும் காரசாரமாக விவாதிக்கப் பட்டது. ஜனநாயக அரசியல் இயக்கத்திற்கு ஒரு இடத்தை தருவதை எப்படி ஏற்றுக் கொள்வது என தர்க்கம் ஏற்பட்டது. இதைவிட்டு திரு அமிர்தலிங் கம் பதிலளிக்கையில் எமக்கு ஒரு இடம் கூட இல்லா விட்டாலும் கூட பரவாயில்லை இந்த ஒப்பந்தத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டு பயணிக்க இந்த நட வடிக்கை உதவும் என்றால் அதை ஏற்றுக்கொள்ள நான் தயார் என கூறியதுடன், பின்னர் தேர்தலில் மக்கள் தீர்மானிக்கட்டும் யார் தங்களது ஜனநாயக பிரதிநிதிகள் என கூறி அந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். பின்னர் தமிழீழ மக்கள் விடுதலை கழகம் தாங்கள் பங்கு பற்ற விரும்பாமல் அந்த இடத்தையும் தமிழர் விடுதலை கூட்டணிக்கு வழங்க முற்பட்டது. ஜெயவர்தனாவின் நரித்தனமான செயல்பாட்டால் தலைமைக்கு விடுதலை புலிகள் கொடுத்த மூன்று பெயர்களில் தனக்கு நெருக்கமான ஒருவரை நியமிக்க முயற்சிக்க இடைக்கால நிருவாகம் கிடப்பில் போடப்பட்டது.

வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட நேரத்தில் விடுதலை புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையே உரசல்கள் ஏற்பட்டு பின்னர் முறுகலாகி தாக்குதல்கள் நடைபெற ஆரம்பித்திருந்தன. இந்த நிலையில் இந்திய தூதுவர் திரு டிக்சித் அவர்கள் தமிழர் விடுதலை கூட்டணியை அந்த தேர்தலில் பங்கு பற்றி இணைந்த மாகாண சபையை பொறுப்பெடுத்து ஒப்பந்தத்திற்கு பூரண ஆதரவை வழங்கும் படி அழுத்தம் கொடுத்த வண்ணமிருந்தார். ஏற்கனவே உள்நாட்டிலும் வெளி நாட்டிலும், பல இடங்களிலும் இந்த ஒப்பந்தத்திற்கான பூரண ஆதரவை பதிவு செய்த தமிழர் விடுதலை கூட்டணி இந்த ஒப்பந்தம் பற்றிய தமது ஆதரவை "செல்வா ஈட்டிய செல்வம்" என்ற புத்தகத்தின் மூலம் எழுத்திலும் பதிந்திருந்தது. இந்தியாவிலும் இலங்கையிலும் இருந்த தூதரகங்களை சந்தித்தும் தாம் இந்த ஒப்பந்தத்திற்கான பூரண ஆதரவை வழங்குவதாக கூறியிருந்தனர். தேர்தலில் பங்கு பற்றுவது பற்றி விவாதம் எழுந்த போது ஆயுதமேந்தாத மிதவாத இயக்கமான தமிழர் விடுதலை கூட்டணிக்கு மிக அதிக தெரிவுகள் இருக்கவில்லை. ஒன்றில் தேர்தலில் முழுமையாக பங்கு பற்றி வேட்பாளர்களை அறிவித்து அந்த வேட்பாளர்கள் தமிழீழ விடுதலை புலிகளால் ஒவ்வொருவராக வேட்டையாடப்படுவதை, கொலை செய்யப்படுவதை பார்த்து அனுதாபக் கூட்டம் வைத்தபடி இருக்க வேண்டும் இல்லா விட்டால் அந்த தேர்தலில் நேரடியாக பங்கு பற்றாமல் இருக்க வேண்டும். அன்று வட கிழக்கிலி ருந்து கொழும்பில் நடை பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் விடுதலை கூட்டணியின் செயல்பாட் டாளர்கள் அனைவரும் தேர்தலில் பங்கு பற்றுவதில் இருந்த பிரச்சனைகளையும், தேர்தலில் பங்கு பற்றினால் தாங்கள் உயிரிழப்பது உறுதி எனவும் கருத்து வெளி யிட்டனர். சென்னையிலிருந்து வந்து கொழும்பி லிருந்து செயல்பட்டு கொண்டிருந்த தமிழர் விடுதலை கூட்டணி



தலைமையானது இந்த கருத்தை ஏற்று தமது செயல்பாட்டாளர்களதும் ஆதரவாளர்களதும் உயிரை பணயம் வைக்காமல் மாகாண சபை தேர்தலில் பங்கு பற்றுவதில்லை என்ற முடிவை எடுத்தது. இதனால் பல பாதிப்புகள் இருந்தாலும் கூட அன்றைய கால கட்டத்தில் தாங்கள் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்புடன் கொழும்பிலிருந்து கொண்டு தமது செயல்பாட்டாளர்களின் உயிர்களை பணயம் வைக்க விரும்பாமலேயே இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டது. இதை இந்திய தூதுவருக்கு தெரிவித்த போது அவர் இந்த முடிவு பற்றி தனது அதிருப்தியை தெரிவித்ததுடன் தாங்கள் அமைதிப்படையின் பாதுகாப்பை வேட்பாளர்களுக்கு தருவதற்கு முன்வந்தார். சரியோ பிழையோ இந்திய இராணுவத்துடன் எமது இளைஞர்கள் யுத்தம் செய்த படி இருக்கையில் இந்திய அமைதிப்படையினரின் பாதுகாப்புடன் தமது வேட்பாளர்கள் தேர்தலில் பங்கு பற்றுவதையும் தமிழர் விடுதலை கூட்டணி விரும்பவில்லை.

அது மட்டுமல்ல ஏற்கனவே நிராயுதபாணிகளாக மக்களுடன் இருந்து யாழ்ப்பாணத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான தலைவர்கள் தருமலிங்கம், ஆலால சுந்தரம் போன்றவர்களையும் ஏனைய பலரையும் அநியாயமாக நம்மவர்களின் துப்பாக்கிகளுக்கே பலி கொடுத்த சம்பவங்களும் நடந்த நிலையில் இந்த முடிவே சிறந்ததாகப்பட்டது.

இன்று முப்பத்தைந்து வருடங்களின் பின்னர் ஏன் தமிழர் விடுதலை கூட்டணி அன்று தேர்தலில் பங்கு கொள்ளவில்லை என்பதற்கு இதுவே விளக்கமாகும். அன்றைய நிலையில் இருந்து சிந்திப்பதே சிறந்த நிலைப்பாடாகும்.

# சனத்தொகையில் சீனாவை விஞ்சுவது இந்தியாவுக்கு நன்மை அளிக்குமா?

செய்தி கண்டிருப்பீர் சனத்தொகையில் சீனாவை முந்திக் கொண்டது இந்தியா சந்தோஷத்தில் மிதப்பேனா? கவலையில் குன்றிப் போவேனா? வியாழனன்று காலை, த ரைம்ஸ் ஒவ் இந்தியா' நாளிதழ் தனது வாசகர்களுக்கு வழங்கிய காலை வணக்கச் செய்தி.

மக்கள் தொகையில் சீனாவை முந்தும் இந்தியா: ஐ. நா. கணிப்பு என்பது தான். ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் (UNFPA)இன் '2023 உலக மக்கள்தொகை நிலை அறிக்கையில் ஆண்டின் மத்தியில் சீனாவின் மக்கள் தொகை 142.57 கோடியாகவும் இந்தியாவின் மக்கள் தொகை 142.86 கோடியாகவும் இருக்கும் என்று கணித்துள்ளது.

இந்தியாவின் மக்கள் தொகை, ஆண்டுக்கு 1.6 முதல் 1.7 கோடி வரை அதிகரித்து வருகிறது. ஜீன் இறுதிக்கு இன்னும் பத்து வாரங்களே உள்ள நிலையில், ஏற்கெனவே இந்தியா சீனாவை முந்தியிருக்கலாம் அல்லது இனி எப்போது வேண்டுமானாலும் அது நடக்கலாம்.

இதில் ஒரு நல்ல விஷயம் என்ன வென்றால், இந்தியாவின் மக்கள் தொகையில் 65 சதவிகிதம், 35 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுதான். தனது மக்கள் தொகையில் 26 சத விகிதம், 10-24 வயதுக்குட்பட்டவர்களுடன் உலகின் மிகப்பெரிய இளைஞர் கூட்டத்தைக் கொண்டுள்ளது இந்தியா. 2030 வரை இளம் மக்களை அதிகம் கொண்ட மிகப்பெரிய நாடாக இந்தியா இருக்கும் என்றும் 2025 வரை இந்த இளைஞர் படையுடன் வாய்ப்புகளுக்கான வழி திறந்திருப்பதாகவும் யூ. என்.எவ். பி. ஏ. கூறுகிறது.

ஜனவரியில், குடியரசு தின அணிவகுப்பில் பங்கு பெறத் தயாராகிக் கொண்டிருந்த தேசிய மாணவர் படையினரிடையே உரையாற்றிய பிரதமர் நரேந்திரமோடி, இந்தியா தனது அமுத காலத்தில் இருப்பதாகவும் இந்தியாவின் வளர்ச்சிப் பயனைப் பெருமளவில் அனுபவிக்கப் போவது இளைஞர்களே என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கல்வியிலும் அதிகாரமளித்தலிலும் அதிக கவனம் செலுத்துவதால் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டு, படித்த இளைஞர்களின் கிராமங்களை நோக்கிய மீள் புலம்பெயர்வு சாத்தியமாகும் என்று அவர் உறுதியான நம்பிக்கை தெரிவித்திருந்தார். ஆனால், கவலையளிக்கும் உண்மை ஒன்று உள்ளது.

உலகக் கல்வியறிவு 9 0வீதமாக இருக்கும் நிலையில், இந்தியாவின் மக்கள் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 77 வீதத்தினர் தான் உள்ளனர். சீனாவில் இது 99.83 வீதமாக இருக்கிறது. அதாவது, இத்தனை ஆண்டுகளாக, நாட்டை ஆளும் அரசியல்வாதிகள், கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய போதுமான முயற்சிகளை எடுக்கக் கவனம் செலுத்தவில்லை என்பது தெரிகிறது.

நாட்டின் ஒரு சில பகுதிகளில் மட்டும் படிப்பறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்றால், அதற்கு ஆள்பவர்கள் தங்கள் பொன்னான நேரத்தையும் ஆற்றலையும் இதை நோக்கிச் செலுத்துகிறார்கள் என்பதை விட, கல்வி பெற வேண்டும் என்ற மக்களின் ஆர்வமே காரணமாக இருந்து வருகிறது. கல்விக்கும் படிப்பறிவுக்கும் சிறு வித்தியாசம் இருப்பதை நாம் நன்கறிவோம். படிப்பறிவு என்பதைவிட மிகச் சிறப்பானது கல்வி பெறுவது. ஒருவர் தொடக்கப் பள்ளிக்குச் சென்று எண்ணையும் எழுத்தையும் கற்று, எழுதப் படிக்க அறிந்திருந்தால் அவர் படிப்பறிவு பெற்றவராகிறார். இதைத் தாண்டி மேலே வளர்வது கல்வி படிப்பறிவில் இந்தியாவை விடச் சீனா வெகுவாக முன்னேறியிருக்கிறது. ஆனால் உற்பத்தித் திறனை மேம்படுத்தக்கூடிய வேலை வாய்ப்பை உறுதி செய்யக் கூடிய திறன் சார்ந்த கல்வி பெற்ற மக்கள் எண்ணிக்கை இந்தியாவில் இன்னுமே மோசமாக உள்ளது வேதனையான விஷயம். ஒரு நாட்டின் மக்கள் தொகையால் பெறக்கூடிய பலனை மதிப்பிடும்போது, எண்ணிக்கையை மட்டுமல்லாமல் தரத்தையும் பார்க்க வேண்டியது அவசியம்.



எண்ணிக்கையும் முக்கியம் ஆனால், அதை விட முக்கியம் வளமான திறன். மக்கள் தொகையில் இந்தியா, சீனாவை முந்துகிறது என்ற ஐ. நா.அறிக்கை குறித்துப் பேசிய சீன வெளியுறவுத் துறைச்செய்தித் தொடர்பாளர் ஒருவர், 1.4 பில்லியன் சீனர்களில் 900 மில்லியன் பேர் பணியாற்றும் வயதிலும் சராசரியாக 10.9 ஆண்டுகள் கல்வி பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இப்போது புதிதாகப் பணியில் சேருவோரின் சராசரிக் கல்விக் காலம் 14 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது என்று தெரிவித்தார்.

சீன அரசிடமிருந்து வெளியான அதிகாரபூர்வ அறிக்கைகளின் உண்மைத் தன்மை குறித்த என் ஐயம் காரணமாக பொதுவாக அதை, தன் சர்வாதிகார ஆட்சிக்கு ஆதரவாகச் செய்யப்படும் கம்யூனிஸ்ட் பிரசாரம் என்று புறந்தள்ளினாலும் சீனாவின் கல்வி கற்ற பணிக்குத் தகுதியான மக்கள் தொகை குறித்த அயலுறவுத் துறைச் செய்தித் தொடர்பாளரின் கருத்து நியாயமானதாகவும் நாட்டின் பெருமைக்குரியதாகவுமே படுகிறது.

சீனா குறித்து, நான் கவனித்த மற்றொரு நல்ல விஷயம், ஆண்கள் அளவுக்குக் கல்வியும் பணித் தகுதியும் பெற்ற பெண்களும் இருப்பது தான். சீனாவில், 2021ஆம் ஆண்டுக்கான கணக்கெடுப்பின்படி பெண்கள், ஆண்கள் மாணவர் விகிதம் தொடக்கப் பள்ளி அளவில், 1.01 வீதமாக இருந்தது. அதாவது, ஒரு பள்ளியில் அல்லது ஒரு வகுப்பில் 100 பெண் குழந்தைகளுக்கு 101 ஆண் குழந்தைகள் இருந்தனர். இது, 0.99 விகிதம் என்ற சர்வதேச விகிதாசாரத்தை விட மேம்பட்டதாகத் தெரிகிறது. அதே கால கட்டத்தில், இந்திய அளவில் இது 1.05 விகிதமாக இருந்தது. எனினும், நாம் இந்தப் புள்ளி விவரத்தால் ஏமாந்து விடக்கூடாது. காரணம், இந்தியாவில் படிப்பறிவு என்பது, பெண்களுக்கு 77 சதவிகிதமா கவும் ஆண்களுக்கு 85 சதவிகிதமா கவும் இருப்பதாக உலக வங்கி இந்தியா அறிக்கை மார்ச் 2023 தெரிவிக்கிறது.

சீன மக்கள் தொகையை இந்தியா முந்துவது குறித்த மற்றோர் அம்சத்தையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். இந்தியாவில் நிலவும் மக்கள் தொகை அடர்த்தி மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது. சீனாவின் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியே இருக்கும் இந்தியா, சீனாவுடன் மக்கள் தொகையில் முந்துவது நல்லதன்று.

இந்திய அரசும் பல்வேறு மாநில அரசுகளும் இணைந்து அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் வளர்ச்சியை எட்ட முயற்சிகளை அதிகரிக்காத வரை வெறும் மக்களின் எண்ணிக்கையில் மட்டும் உயர்வு என்பது, நேர்மறை அதிகாரமளித்தல் மறுக்கப்பட்டு, வறுமைக்கும் பட்டினிக்கும் மக்கள் தள்ளப்படும் போது ஒழுங்கீனத்துக்கும் வன்முறைக்கும் தான் வழி வகுக்கும்.

கொள்ளைக்கார ஆங்கிலேய ஏகாதிபத்திய காலத்தில், 11 பெண்களில் ஒருவர் தான் படிப்பறிவு பெற்றிருந்த நிலையிலிருந்து, அதாவது 9வீத பெண் கல்வி என்ற நிலையிலிருந்து, இன்றைய நிலை மிகப்பெரிய முன்னேற்றம் தான். மத்திய அரசும் மாநில அரசுகளும் அறிமுகப்படுத்திய பல்வேறு சிறந்த திட்டங்கள் மூலம் தொடக்கக் கல்வி மட்டுமல்லாமல் உயர் கல்வி வரை பெண்களைத் தொடர வைப்பதில் பங்காற்றியுள்ளன. இருப்பினும், பயணிக்க வேண்டிய தூரம் இன்னும் நிறைய இருக்கிறது.

94வீத படிப்பறிவுடன், இந்தியாவின் மிகச் சிறந்த மாநிலமாகத் திகழும் கேரளாவுடன் ஒப்பிடும் போது வெறும் 62வீதம் மட்டுமே படிப்பறிவு பெற்ற பீஹாரின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்திய ஆட்சியாளர்களுக்குக் கல்வி என்பது எவ்வளவு முக்கியமில்லாத விஷயமாக இருந்து வருகிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான். மக்களின் வரிப்பணத்தைக் கொண்டே அவர்களை ஊழல்வாதிகளாகவும் சோம்பேறிகளாகவும் ஆக்கும் இலவசங்களைக் கொடுத்து, வாக்கு வேட்டையாடுவதில் காட்டும் கவனத்தை மத்திய, மாநில அரசுகள், தரமான கல்வியளித்து விளிம்பு நிலை மக்களுக்கு அதிகாரமளித்துப் பணித் தகுதி பெறச் செய்வதில் காட்டவில்லை. மத்திய அரசு, ஆயுதக் கொள் முதலிலும் மாநில அரசுகள் தேர்தல்களின் போது வாக்குகளை வாங்க நலத் திட்டங்களை அறிவிப்பதிலும் மிகப் பெரியதொகைகளைச் செலவிடுகின்றன. இந்நிலை, சீனாவில் இல்லை. காரணம், அங்கு வாக்கு வங்கி அரசியல் இல்லை. கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத சீன கம்யூனிஸ்ட் கட்சியின் ஒற்றைக் கட்சி ஆட்சி முறை கொண்ட நாட்டின் தேர்தலில் மக்களுக்குப் பெரிய பங்கு ஒன்றும் இல்லை. கருத்து சுதந்திரமும் இல்லை. ஊடகங்களும் அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனவே, கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் சிறந்து விண்ணைத் தொடும் கட்டடங்களின் வளர்ச்சி, புல்லட் ரயில்களின் வேகம், அறிவியல் தொழில்நுட்பத்தில் மேம்பாடு, இவற்றுடன், அமெரிக்க - நேட்டோ சக்திகளுக்கு இணையாக ஓர் ஆற்றல்மிக்க சக்தியாக உருவாகிக் கொண்டிருக்கும் சீனாவில் வாழ விரும்புகிறீர்களா என்று என்னைக் கேட்டால் என் உடனடி பதில் உறுதியாக இல்லை என்பதாகத் தான் இருக்கும். எனது சுதந்திரக் காற்று இதமானது.

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**பகவான் சிங்**

இலங்கையில் உள்ள படிப்பறிவு மற்றும் கல்வியின் நிலை குறித்து நான் எதுவும் கூறவிரும்பவில்லை. என் இனிய ஈழநாடு வாசகர்கள் அதில் நிபுணர்கள். கதிரவனைப் பார்க்கக் கை விளக்கு எதற்கு? ஆனால், 1983 முதல் உங்கள் சங்கடமான காலம் தொடங்கி உங்கள் நாட்டின் விவகாரங்களைச் செய்திகளாகத் திரட்டி வழங்கி வந்த ஒரு பத்திரிகையாளனாக இரண்டு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நாட்டில் கல்வித் தரத்தையும் பணித் தகுதியையும் உயர்த்த அரசியல் தலைவர்கள் கணிசமான பங்காற்றவில்லை என்று நான் கூறுவதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள்.

உங்களிடம் இருந்து விடை பெறும் முன், சீனாவின் கல்வியும் அதிகாரமும் பெற்ற மக்கள் குறித்து அந்நாட்டின் அயலுறவு துறைச்செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட பெருமையான மொழிகளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அவரது பெருமையில் நியாயம் இருக்கிறது. ஆனாலும், அந்த மக்களின் உள்மனம் மற்றும் ஆன்ம ஆரோக்கியம் குறித்த அச்சமும் எழு கின்றது. சீனர்கள், தங்கள் வாழ்க்கையில் உண்மையான மனநிம்மதியும் மகிழ்ச்சியும் பெற்றிருக்கிறார்களா? நமது நாட்டின் ஷொப்பிங் மால்களிலும் பூங்காக்களிலும் மற்ற பொது இடங்களிலும் அவர்கள் மகிழ்ச்சியுடன் சிரித்து வலம் வருவதைப் பார்க்கிறோம். அந்த மகிழ்ச்சியும் சிரிப்பும் கருத்து சுதந்திரத்தை ஒடுக்கி - ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்கும் 'கம்யூனிஸ சர்வாதிகாரம்' என்ற சோதனை. சாலையில் உருவாக்கப்பட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது. ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், சில இடங்களின் நவீன வாழ்க்கை முறையும் நகரமய மாக்கலின் செழுமையும் மட்டுமே ஒரு நாட்டின் உண்மையான வளர்ச்சியையோ மக்களின் மன மகிழ்ச்சியையோ பிரதிபலிப்பதாகாது. கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் சீனாவின் வளர்ச்சி நாம் பொறாமைப் படக்கூடிய அளவில் இருக்கிறது என்பதை (18ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவைச் சூழும் ஆபத்து!

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



அண்மைக் காலமாக பிராந்தியத்தில் சீனாவின் நகர்வுகள் குறித்து பல்வேறு தகவல்கள் வெளியாகி கொண்டிருக்கின்றன. குறிப்பாக இலங்கை, பாகிஸ்தான், மியான்மார் உள்ளிட்ட நாடுகளில் சீனா, தனது பாதுகாப்பு நலன்களை விரிவுபடுத்தி வருவதாக, பல்வேறு தகவல்கள் வெளியாகின்றன.

இவற்றில் உண்மைகளும் உள்ளன, பொய்களும் இருக்கின்றன. மிகைப்படுத்தப்பட்ட தகவல்களும், பல சமயங்களில்வெளியாவது வழக்கம். இலங்கையின் தென்பகுதியில் தேவேந்திரமுனை காட்டுப் பகுதியில், சீனா ரேடார் நிலையம் ஒன்றை அமைக்க உள்ளதாக அண்மையில் தகவல் ஒன்று வெளியானது. அது போல, மியான்மாரில் கொகோதீவில் அமைக்கப்பட்டு வரும் விமான ஓடுபாதையுடன் கூடிய ரேடர் நிலை தொடர்பாகவும் அண்மையில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த இரண்டும் இந்தியாவில் பாதுகாப்பு நலன்களுடன் நேரடியாக தொடர்புபட்டவை. இந்த இரண்டு இடங்களிலும் சீனா தனது ரேடர் நிலைகளையோ அல்லது பாதுகாப்பு வசதிகளையும் உருவாக்கிக் கொண்டால், அது இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு மிகுந்த அச்சுறுத்தலான விடயமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.



இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் சீனாவின் பாதுகாப்பு ஆதிக்க விரிவாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழலில், இந்தியா தனது பாதுகாப்பு குறித்தும் அதன் கூட்டாளியான அமெரிக்காவும் மேற்குலகமும் பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்தும் கவலைப்படாமல் இருக்க முடியாது. அதனால் தான், இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் குறிப்பாக தெற்காசிய பிராந்தியத்தில் சீனா முன்னெடுக்கின்ற எல்லா நகர்வுகளும் உன்னிப்பாக கவனிக்கப்படுகின்றன. இந்த கவனிப்புகள் பல சமயங்களில் ஊகங்களையும் புரளிகளையும், மிகையான தகவல்களை வெளிப்படுத்துகின்ற நிலையையும் ஏற்படுத்தி இருக்கிறது.

சீனா பல்வேறு நகர்வுகளையும் முன்னெடுப்பதும் அவை தொடர்பாக, இரகசியங்களை பேணுவதும் இரகசியமான விடயம் அல்ல. அதற்காக சீனா, மிகப்பெரிய அச்சுறுத்தலாக உருவாகி வருகிறது என்று பூதாகரமாக மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாவது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இலங்கையின் தென்முனையில் சீனா ரேடர் நிலையம் ஒன்றை அமைக்க உள்ளதாக வெளியான தகவல்களை அமைச்சர் அலி சப்ரி நிராகரித்திருக்கிறார்.

இது தொடர்பாக சீன தூதரகத்திடம் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அலட்சியமான பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்திய ஊடகங்களின் இவ்வாறான செய்திகளை எல்லாம் பொருட்டாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்ற தொனியில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் விஞ்ஞான அக்கடமியின் கீழ் உள்ள, விண்வெளி தகவல் ஆராய்ச்சி நிறுவகமும், ருகுணு பல்கலைக்கழக விஞ்ஞான பீடமும் விண்வெளி ஆய்வு தொடர்பான ஒரு உடன்பாட்டை செய்திருக்கின்றன. இது காலநிலை தொடர்பான தகவல் களை பரிமாறிக் கொள்வது. ஆய்வுகளை மேற்கொள்வது உள்ளிட்ட பல்வேறு ஒத்துழைப்புகளுக்கும் வழி செய்கின்ற ஒரு உடன்பாடு ஆகும். இந்த ஒத்துழைப்பு ஏற்கனவே பல மாதங்களாக இருந்து வருகின்ற நிலையில் தான், தேவேந்திர முனையில் ரேடர் நிலையம் ஒன்றை சீனா அமைக்க உள்ளதாக செய்திகள் வெளியாகின.

இதனை அரசாங்கம் மறுத்திருந்தாலும், நெருப்பில்லாமல் புகை வராது என்று நம்புகிறவர்கள் அதிகம். சீனா தனது ஒட்டு மொத்த வளங்களையும், தனது தேசிய இலக்கை அடைவதற்கான நோக்கில் திருப்பி விட்டிருக்கிறது. அங்குள்ள நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அமைப்புகள் எல்லாமே, சீன அரசாங்கத்தின் திட்டங்கள், இலக்குகளை நிறைவேற்றிக் கொடுக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள பல்கலைக்கழகங்கள் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைப்பு உடன்பாடுகளை செய்திருக்கின்றன. அவை ஆராய்ச்சி.நோக்கங்களை அடிப்படையாக கொண்டதாக இருந்தாலும், சீனா இந்த விடயத்தில் வேறுபட்டு நிற்கிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன், கடந்த ஆண்டு இறுதியில் சீனாவின் விவசாய பல்கலைக்கழகம் உடன்பாடு ஒன்றை செய்து கொள்வதற்கு அரசாங்கத்தின் அனுசரணையுடன் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. ஆனால், அதற்கு யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா இணங்க மறுத்து விட்டார். மாணவர் ஒன்றியமும் அதனைக் கடுமையாக எதிர்த்தது.

ஆனால் ருகுணு பல்கலைக்கழகத்துடன் சீன விஞ்ஞான அகடமிக்கு தொடர்புகள், இணக்கப்பாடுகள் இருக்கின்றன. அவர்கள் தங்களின் ஆய்வுகள், தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதனால் தான், பலரும் நெருப்பில்லாமல் புகை வராது என்கிறார்கள். இவ்வாறான நிலையில், இந்தியாவுக்கு நிச்சயம் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய ஒரு செய்தி அண்மையில் வெளியாகியிருக்கிறது. அது மியான்மாரின் கொகோதீவில் வலுப்படுத்தப் படுகின்ற படைத்தளம் பற்றியது.

மியான்மாரின் தென்பகுதியில் உள்ள, கொகோதீவு, வங்காள விரிகுடாவில், இந்தியாவின் அந்தமான் நிகோபார் தீவுக் கூட் டங்களில் இருந்து, சுமார் 60 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. கொகோ தீவில் ஏற்கனவே இருந்த விமான ஓடுபாதை புனரமைக்கப்பட்டு, 2300 மீற்றர் நீளம் கொண்டதாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அங்கு இரண்டு விமான தரிப்பிடங்கள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

ரேடர்களை பாதுகாக்கும் வகையிலான கட்டமைப்பு ஒன்றும் அங்கு புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது. குடியிருப்புத் தொகுதியும் அதனுடன் காணப்படுகிறது. ஒதுக்குப்புறமான இந்த தீவை பிரதான நிலப்பரப்புடன் இணைக்கின்ற வகையில், 175 மீற்றர் நீளமும், 8 மீற்றர் அகலமும் கொண்ட பாலம் ஒன்றும் புதிதாக அமைக்கப் பட்டிருக்கிறது.

இவையெல்லாம், அண்மையில் வெளியான செய்மதிப் படங்களின் மூலம் வெளிவந்த தகவல்கள்.

இது இந்தியாவுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். ஆனால் வெளியிடவில்லை. மியான்மாரின் இராணுவ ஆட்சியாளருக்கு சீனா ஆதரவளிக்கிறது. சர்வதேச அரங்கில் அவர்களைக் காப்பாற்றுகின்ற முயற்சிகளிலும் ஈடுபடுகிறது. இதற்கு பிரதியீடாகவே, மியான்மாரை சீனா தனது பாதுகாப்பு நலன்களுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு, அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

கொகோதீவில் அமைக்கப்பட்ட வரும் அந்த கேந்திர இராணுவ நிலையானது, ஒரு பக்கம் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு மிக நெருக்கமாக இருக்கிறது. இன்னொரு பக்கம் மலாக்கா நீரிணைக்கு அருகாக காணப்படுகிறது. அதேவேளை வங்காள விரிகுடாவில் கிழக்கு புறத்தில் காணப்படும் கொகோதீவில் இருந்து, மேற்கு புறத்தில் உள்ள இந்தியாவின் முக்கியமாக ஏவுகணை மற்றும் விண்வெளி ஆய்வு தளங்களை இலகுவாக கண்காணிக்க முடியும்.

இந்தியாவின் கிழக்குப் பகுதியில் தான் பிரதானமான அதன் விண்வெளி மற்றும் ஏவுகணை சோதனை மையங்கள் மற்றும் ஏவுதளங்கள் காணப்படுகின்றன. இங்கிருந்து தான் இந்தியா தனது முக்கியமான ஏவுகணை பரிசோதனைகளை மேற் கொள்வது வழக்கம். கொகோதீவில் சீனா தனது ரேடார் கண்காணிப்பு மையத்தை அமைக்குமானால் இந்தியாவின் பாதுகாப்புக்கு குறிப்பாக ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

கொகோ தீவில் சீனா அமைத்து வரும் இராணுவ கண்காணிப்பு நிலை இந்தியாவுக்கு பெரும் சவாலாக மாறக் கூடும். இலங்கையில் சீனா அமைப்பதாக கூறப்படும் கண்காணிப்பு நிலையை விட, இது இன்னும் கூடிய ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது.

இதனால் இந்தியா இந்த விவகாரத்தை சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை எடுத்துக் கொள்ளவும் முடியாது. சம தருணத்தில் இலங்கையிலும் இவ்வாறானதொரு நிலையை சீனா அமைக்குமா? இல்லையா? என்ற கேள்வி இந்தியாவுக்கு இருப்பதால் தான், இது தொடர்பான வதந்திகளும் உலா வருகின்றன.

மியான்மாரை கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் இந்தியா.ல்லை. எனவே கொகோதீவில் சீனா தனது கண்காணிப்பு நிலையை அமைக்கும். அதனை இந்தியாவினால் நேரடியாக தலையிட்டு தடுக்க முடியாமல் இருக்கும். ஆனால் இலங்கையில் அவ்வாறான நிலை இல்லை. ஏற்கனவே சீனாவின் பல திட்டங்களை இந்தியா தடுத்திருக்கிறது.

தேவேந்திர முனை பகுதியில் சீனா ரேடர் நிலையை அமைக்கும் திட்டம் உண்மையா பொய்யா என்பதற்கு அப்பால், அவ்வாறானது ஒரு திட்டத்தை செயல்படுத்தும் போது, சீனா கடுமையான அழுத்தங்களை எதிர் கொள்ளும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இந்தியாவும், அமெரிக்காவும் அதனைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கும்.

ஏனென்றால், அது இந்தியாவுக்கு மாத்திரமன்றி, டியாகோகார்சியாவில் உள்ள அமெரிக்க, பிரித்தானியா தளங்களுக்கும், அதற்கு அருகே ரியூனியன் தீவில் உள்ள பிரெஞ்சு தளங்களுக்கும் கூட இந்த தளம் அச்சுறுத்தலாக இருக்கும்.


**COOK & WORKING PARTNER WANTED**

Scarborough, Windsor, London, Miltonஇல் புதிதாகத் திறக்கப்படவுள்ள Restaurantக்கு Canadian, Srilankan, Italian, Indian மற்றும் Bakeryஇல் சமையல் அனுபமுள்ளவர்கள் ஆர்வமிருந்தால் தொடர்புகொள்ளவும்.




சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தூரத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்கும் இடவசதி தேவை ஏற்பட்டால் ஒழுங்கு செய்து தரப்படும்.


அத்துடன் Working partner ஆக இணைய விரும்புபவர்களும், Restaurant ஐ வாடகைக்கு எடுத்து நடத்த விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 416.294.9677


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! தடைபட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.. உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்



ரிஷபராசி அன்பர்களே! வீண் மனகு ழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்யோகத்தில் கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினருடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.




மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். மனம் ஒருநிலைப்படும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமானபோக்கு காணப்பட்டாலும் பணவரத்து குறைவு இருக்காது.தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.



கடகராசி அன்பர்களே! மனோ தைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.



சிங்கராசி அன்பர்களே! மன குழப்பம் நீங்கும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவர்.



கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். பணியாளர்கள் உதவியும் கிடைக்கும்




துலாம்ராசி அன்பர்களே! சுபச் செலவுகள் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.




விருச்சிகராசி அன்பர்களே! மன நிம்மதி கிடைக்கும். புத்திசாதுர்யம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.







தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும்.



மகரராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. தன்மையாக பேசுவது நல்லது.



கும்பராசி அன்பர்களே! சுபச் செலவுகள் உண்டாகும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.



மீனராசி அன்பர்களே! எல்லாவிதமான முன்னேற்றமும் ஏற்படும். பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# குரங்காட்டி அரசியல்?

(15ம் பக்கத் தொடர்ச்சி) இலங்கைத் தீவு இதுவரையிலும் பணிப்பெண்களையும் வீட்டு உதவியாட்களையும் நாட்டுக்கு வெளியே அனுப்பி வருமானத்தைப் பெறுகின்றது. இப்பொழுது குரங்குகளையும் அனுப்பினால் என்ன? என்று சிந்திக்கும் ஒரு நிலைமை வந்திருக்கிறதா?

அரசாங்கம் உண்மையாகவே குரங்குகளை அனுப்புமா இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆனால் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளுக்கு கீழ்படிந்த அரசாங்கம் பொதுமக்களை வருத்தும் பொழுது கொதித்து எழும் சிங்கள மக்களைத் திசை திருப்ப குரங்கு விற்பனை விவகாரம் சில சமயம் அரசாங்கத்திற்கு உதவுமா? அதாவது அரசாங்கம் ஒரு குரங்காட்டியின் வேலையைச் செய்கின்றதா?

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி முதல் மத நிகழ்வுகளைத் தவிர காலி முகத்திடலில் இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் மற்றும் மக்கள் கூடும் நிகழ்வுகளுக்கு அனுமதியில்லை என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது மே நாள் ஊர்வலங்களும் உட்பட எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் காலிமுகத் திடலை நோக்கி அதாவது தலைநகரில் தூதரகங்களின் பார்வைக்குள் வருவதைத் தடுக்கும் உள்நோக்குடையது. அதாவது ஆர்ப்பாட்டங்களையிட்டு அரசாங்கம் உசாராகக் காணப்படுகிறது. எனவே மக்களுடைய கவனத்தைத் திட்டமிட்டுக் குழப்பவேண்டும். அதற்கு குரங்குகள் உதவுமா?

நவீன ஊடகக் கலாச்சாரம் எனப்படுவது ஒரு வகையில் வாசகர்களையும் பார்வையாளர்களையும் குரங்கு நிலையில் தான் வைத்திருக்கின்றது. திட்டமிட்டு ஒரு ட்ரெண்டை செற் பண்ணுவதன் மூலம் ஒரு சமூகத்தின் கூட்டுக் கவனக் குவிப்பை அடிக்கடி மாற்றலாம். குரங்கு கொப்புக்கு கொப்பு தாவுவதைப் போல. இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் போது பொதுமக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய கோபத்தையும் விரக்தியையும் திசை திருப்ப குரங்கும் அரசாங்கத்துக்கு உதவுமா?

# கஞ்சாக் கடத்தல் வழக்கில் சிங்கப்பூரில் தங்கராஜ் சுப்பையா தூக்கிலிடப்பட்டார்

(7ம் பக்கத் தொடர்ச்சி) தளமாகக் கொண்ட மருந்துக் கொள்கைக்கான உலகளாவிய ஆணையத்தின் உறுப் பினர் ரிச்சர்ட் பிரான்சன், தங்கராஜ கைது செய்யப்பட்ட நேரத்தில் உண்மையில் போதைப்பொருள் அருகில் எங்கும் இல்லை. ஒரு அப்பாவியை சிங்கப்பூர் கொல்லப்போகிறது. சிங்கப்பூரின் சில கொள்கைகள் காலனித்துவத்திற்குத் திரும்புவதைப் பார்ப்பது மிகவும் வருத்தமாக இருக்கிறது எனக் கூறி மரண தண்ட னையை நிறுத்துமாறு கடந்த திங்களன்று அழைப்பு விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த சிங்கப்பூர் உள்துறை அமைச்சு, தங்கராஜீவின் குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபி க்கப்பட்டிருப்பதாக தெரிவித்தது. இந்த நிலையில், தங்கராஜீவின் மரண தண்டனையை சிங்கப்பூர் அரசு 26 ஏப்ரல் 2023 புதன்கிழமை நிறைவேற்றியது. இதன் மூலம் கடந்த ஆறு மாதங்களில் நிறைவேற்றப்பட்ட முதல் மரண தண்டனையாக இது அமைந்தது. மேலும் கடந்த ஆண்டு மார்ச் முதல் நிறைவேற்றப்பட்ட 12ஆவது மரண தண்டனை இதுவாகும்.

# வடக்கு -கிழக்கில் இயல்பு முடக்கம்

(5ம் பக்கத் தொடர்ச்சி) கூட்டாக தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளன. இது குறித்து அவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முக்கிய அம்சம் வருமாறு, இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் கலாசாரம் பண்பாடு, மற்றும் அவர்களது புராதன சின்னங்களை அழித்தொழித்து அவ்விடங்களில் புத்த கோயில்களைக் கட்டி, பௌத்த சமய திணிப்பை ஏற்படுத்துவதற்கு எதிராகவும் இலங்கை அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் தமது எதிர்ப்பை முழுமையாகப் பதிவு செய்யவும் தமது கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்ளவும் வட – கிழக்கில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இத்தகைய மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தக் கோரியும் வடக்கு – கிழக்கில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு நடத்திய பொதுமுடக்கமானது முழுமையாக வெற்றியடைந்துள்ளது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய ஏழு கட்சிகள் ஒன்றிணைந்து முழு முடக்கத்துக்கான கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இதற்கு ஆதரவாக முஸ்லிம் கட்சிகளும் எம்முடன் கைகோத்திருந்தனர். மேலும், இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக வட – கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் சங்கங்கள், பொது அமைப்புகள், போக்குவரத்து நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள் போன்ற அனைவரும் ஒன்றிணைந்து இந்த பொதுமுடக்கம் வெற்றி பெற தமது முழுமையான ஒத்துழைப்பை நல்கினார்கள். புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற தமிழ் அமைப்புகளும் இலங்கையில் இருக்கின்ற மத நிறுவனங்களும் ஒன்றுபட்டு இந்தக் கண்டன நடவடிக்கைக்கு ஆதரவளித்திருந்தார்கள். இந்த பொது முடக்கத்துக்கு ஒத்துழைத்த அனைத்து மக்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றி கூறிக்கொள்கின்றோம்

# சரத் வீரசேகர வெளியேறுகின்றாரா?

நாட்டைப் பிரிக்கும் நிலை ஏற்பட்டால் மாத்திரமே நான் மொட்டுக் கட்சியை விட்டுச் செல்வேன். அதுவரை இந்தக் கட்சியில்தான் இருப்பேன்` என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

26.04.2023 ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் கூறுகையில், `நான் எப்போதும் மொட்டுக்கட்சி தான். என்னை அம்பாறையில் இருந்து வந்து கொழும்பில் போட்டியிடுமாறு கோட்டாபய தான் அழைத்தார். 3 இலட்சத்து 28 ஆயிரம் வாக்குகளைக் கொழும்பு மக்கள் எனக்கு வழங்கி என்னை வெற்றி பெற வைத்துள்ளனர்.

எந்தக் கட்சியிலும் வீழ்ச்சி எழுச்சி என்ற இரண்டும் உண்டு. நான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி பின்னடைவைச் சந்திக்கும்போது அதில் இருந்து விலகுவது சரியில்லை. நாட்டின் பாதுகாப்புக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டால் அல்லது நாட்டைப் பிரிக்கும் நிலை ஏற்பட்டால் மாத்திரமே நான் மொட்டுக் கட்சியை விட்டுச் செல்வேன். அதுவரை இந்தக் கட்சியில்தான் இருப்பேன்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..



Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

RANJANI THIRUKESWARAN LAW OFFICE

- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)



TAX CENTRIC

Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A,
MISSISSAUGA, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Tel: 289.569.0169

Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph

- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE

ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES

$599*
FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும் சுயதொழில் செய்வோருக்கும் மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.



விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800

10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

